KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 05 September 2025 இதழ்:- 28

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## யாழ்ப்பாண விஜயத்தின் போது புலனாய்வு அதிகாரிகளை அலற வைத்த ஜனாதிபதி அநுர!



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு 01 செப் 2025 சென்றிருந்த நிலையில் அவர் எப்போது யாழ்ப்பாணம் வருகின்றார்? யாழ்ப்பாணத்தில் எங்கு தங்கியிருக்கின்றார்? என்ற விடயம் புலனாய்வு அதிகாரிகள் (5ம்பக்கம் பார்க்க)

ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## இனி மேல் யுத்தம் ஒன்று வராது! இராணுவத்தின் பயன்பாட்டிலுள்ள காணிகள் வீதிகள் விடுவிக்கப்படும்!

### மயிலிட்டியில் அநுர உரை!

# அநுர கச்சதீவு செல்ல விஜய் பேச்சு காரணமா?



எமது கடற்றொழிலாளர்களுக்கு மிக முக்கியமான இடமாக கச்சத்தீவு காணப்படுகின்றது. இந்த கச்சதீவை கேந்திரப்படுத்தி இன்று பாரிய கலந்துரையாடலொன்று எழுந்துள்ளது. இந்த கடல் எமது மக்களுக்கானது. எமது தீவுகள் எமது மக்களுக்கானது. எமது நிலப்பரப்பு எமது மக்களுக்கானது. எமது வானம் எமது மக்களுக்கானது. எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிப்பணிய மாட்டோம்/என சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவிக்கின்றார். யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தில் ஈடு பட்ட ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, மயிலிட்டி மீனவத்துறை முகத்தின் அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கடந்த முதலாம் தேதி கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி கச்சதீவு தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார்(14ம்பக்கம் பார்க்க)



## இலங்கை அரசின் இனஅழிப்புக்கு சான்று செம்மணி!

### இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்குமாறு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணை நாடுகளுக்கு பரிந்துரை

# மாகாணசபைத் தேர்தலை நடத்த இந்தியாவின் தலையீடோ அழுத்தமோ அவசியமல்ல தேர்தலை நடத்த அரசு தயாரா?

மாகாணசபைத் தேர்தலை நடத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை. 1988, 1989களைப் போன்றே இப்போதும் மாகாணசபை முறைமை வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் தான் ஜே.வி.பி. இருக்கிறதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும். இந்த விடயத்தில் இந்தியாவின் தலையீடோ அழுத்தமோ அவசியமல்ல. மக்களின் தேவைக்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் 02 செப் 2025 செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி பதவியேற்று ஓரிரு வாரங்களில் ஓராண்டு நிறைவடையவுள்ளது. ஆகக் குறைந்தது ஒரு பாலம் கூட கட்டப்படாத காலகட்டமாகவே இது காணப்படுகிறது. வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியில் 25 சதவீதம் கூட செயற்படுத்தப்படவில்லை.

மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படவில்லை. சுமார் 9 ஆண்டுகளாக திட்டமிடப்பட்ட யாழ் மைதானத்துக்கே ஜனாதிபதி தற்போது அடிக்கல் நாட்டியிருக்கின்றார். இதற்கான நிதி இலங்கை கிரிக்கட் நிறுவனத்தினாலேயே ஒதுக்கப்படுகிறது. மாறான அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் இந்த மைதானம் நிர்மாணிக்கப்படப் போவதில்லை.



இதுவரை எந்தவொரு வெளிநாட்டு முதலீடுகளும் கிடைக்கப் பெறவில்லை. அவ்வாறிருக்கையில் அபிவிருத்திகள் குறித்து கவனம் செலுத்தாமல் பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரைக் கொண்டு எதிர்க்கட்சிகளை பழி வாங்கும் நடவடிக்கைகளில் மாத்திரமே அவதானம் செலுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இவை மக்களை ஏமாற்றுவதற்காக காண்பிக்கப்படும் பிரசாரமாகும். மறுபுறம் கம்பஹா பிரதேசத்தில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க மற்றும் பிரிதொரு பாராளுமன்ற உறுப்பினருடன் சென்ற குழுவொன்று முன்னிலை சோசலிசக் கட்சியின் அலுவலகத்திலிருந்தோரை தாக்கியுள்ளனர்.

அவர்களை தாக்கி பலவந்தமாக அந்த அலுவலகத்தை கைப்பற்ற முயற்சித்துள்ளனர். அரசியல் ரீதியாக கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்ற போதிலும், அவ்வாறு கட்சி அலுவலகத்திலிருந்தோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தற்போது ஜே.வி.பி. அதன் அடக்குமுறை சட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கிறது. மாகாணசபைத் தேர்தலை நடத்தும் நோக்கமும் இவர்களுக்கு இல்லை. 88, 89களைப் போன்றே இப்போதும் மாகாணசபை முறைமை வேண்டாம் என்ற நிலைப்பாட்டில் தான் ஜே.வி.பி. இருக்கிறதா என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் இந்தியாவின் தலையீடோ அழுத்தமோ அவசியமல்ல. மக்களின் தேவைக்கே முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். மாகாணசபைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. வரலாற்றில் முதல் முறையாக வடக்கு மக்கள் இவ்வாறு மக்கள் ஆணையை வழங்கியிருக்கின்றனர்.

வரலாற்றில் வடக்கு மக்கள் கோரும் ஆகக் குறைந்த அதிகாரம் மாகாணசபைகளாகும். தமக்கு வாக்களித்த மக்களை கௌரவிக்கும் வகையில் அவர்களது எதிர்பார்ப்பினை நிறைவேற்றாமை கவலைக்குரியதாகும் என்றார்.

# இலங்கை அரசின் இனஅழிப்புக்கு சான்று செம்மணி!

## இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்குமாறு புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணை நாடுகளுக்கு பரிந்துரை

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இணையனுசரணை நாடுகளால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை வரைவில் சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறலை வலுப்படுத்தல், ஆக்கபூர்வமான முறையில் இழப்பீடுகளை வழங்கல், மீள்நிகழாமையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அரசியலமைப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய 3 பிரதான கூறுகளை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என சர்வதேச நாடுகளில் இயங்கிவரும் 18 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் இணையனுசரணை நாடுகளுக்கு கூட்டாகப் பரிந்துரைத்துள்ளன.

இது குறித்து பிரித்தானியத் தமிழர் பேரவை, புதுடில்லி தமிழ்ச்சங்கம், ஜேர்மனி தமிழர் கொள்கைப் பேரவை, சுவிட்ஸர்லாந்து தமிழ் நடவடிக்கைக் குழு என்பன உள்ளடங்கலாக பிரிட்டன், பிரான்ஸ், இந்தியா, ஜேர்மனி, நெதர்லாந்து, கனடா, அயர்லாந்து, தென்னாபிரிக்கா, சுவிட்ஸர்லாந்து, மொரீஸியஸ் ஆகிய நாடுகளைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் 18 புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் கூட்டிணைந்து இணையனுசரணை நாடுகளின் பிரதிநிதிகள், பேரவையில் அங்கம்வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகள், கொள்கை வகுப்பாளர்கள் உள்ளிட்ட தரப்பினருக்கு அனுப்பி வைத்திருக்கும் பரிந்துரை ஆவணத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இலங்கை கடந்த ஏழு தசாப்த காலமாக தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பிலும், போர்க்குற்றங்களிலும், மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களிலும் ஈடுபட்டிருப்பதுடன் அதன் விளைவாக சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டை விட்டு அகதிகளாகத் தப்பியோடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கை உள்ளிட்டவற்றைத் தொடர்ந்தும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்கிறது. சாட்சியங்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. அதுமாத்திரமன்றி பாதிக்கப்பட்ட தரப்பினரை மையப்படுத்திய நீதி இன்னமும் நிலைநாட்டப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறலை வலுப்படுத்தல், ஆக்கபூர்வமான முறையில் இழப்பீடுகளை வழங்கல், மீள்நிகழாமையை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் அரசியலமைப்பு மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் ஆகிய 3 பிரதான விடயங்களை முன்னிறுத்தி உடனடி நடவடிக்கையைக் கோரும் வகையில் எதிர்வரும் இம்மாதம் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரேரணை வரைவு அமையவேண்டும்.

குறிப்பாக அண்மையில் யாழ். செம்மணியிலும், திருகோணமலையின் சம்பூரிலும், மன்னாரிலும் கண்டறியப்பட்டுள்ள மனிதப் புதைகுழிகளும், குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்குச் சொந்தமானவை உள்ளடங்கலாக அங்கு அடையாளங் காணப்பட்ட மனித எச்சங்களும் இலங்கை அரசின் இனப்படுகொலை நோக்கத்துக்கான வலுவான ஆதாரங்களாகக் காணப்படுகின்றன. எனவே ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தை 1948 தொடக்கம் இப்போது வரை நிகழ்த்தப்பட்ட சகல அட்டூழியங்கள் தொடர்பிலும் ஆதாரங்களை திரட்டும் வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

அதேபோன்று இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் உடனடியாகப் பாரப்படுத்துவதற்கு அவசியமான வலுவான ஆதாரங்களுடன் கூடிய 15 – 20 முக்கிய வழக்குகளை அடையாளம் காணவேண்டும்.




அடுத்ததாக இலங்கை விவகாரத்தை சர்வதேச நீதிமன்றங்களுக்குப் பரிந்துரைத்தல், உலகளாவிய நீதிப்பொறிமுறையை நடைமுறைப்படுத்தல், இலங்கை விவகாரம் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிப்பொறிமுறையை ஒன்றை ஸ்தாபிக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் பேரவையினால்(9ம் பக்கம்பார்க்க)

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!



என் இனிய உறவுகளே! கடந்த 14 ஆண்டுகளாக (423 குழந்தைகள்) இவர்களது உணவுத் தேவையை தங்கு தடையின்றி பூர்த்தி செய்து வந்தவர்கள் நீங்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில் ஒவ்வொரு கனடியத் தமிழர்களும் இவர்களுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள **eelanadu.ca** என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# இலங்கைத் தமிழர்கள் சட்டபூர்வமாக இந்தியாவில் தங்க அனுமதி!

2015ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதிக்கு முன் உரிய ஆவணங்கள் இன்றி இந்தியாவுக்குள் நுழைந்து, அகதி களாக பதிவு செய்த இலங்கைத் தமிழர்கள் சட்டப்பூர்வமாக இந்தியாவில் தங்குவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு ள்ளன.

இலங்கை தமிழர்கள் இனி சட்டவிரோத குடியேறிகள் அல்ல எனவும் சமீபத்தில் அமுல்படுத்தப்பட்ட குடிவரவு மற்றும் வெளிநாட்டினர் சட்டத்தின் கீழ் உள்ள தண்டனை விதி களிலிருந்தும் இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு விலக்கு அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

போர் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவின் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகள் சுதந்திரமாக இந்தியாவில் தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை இந்தியாவுக்கு அதிகளாக சென்றுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய உள்துறை அமைச்சு, தண்டனைகளில் இருந்து விலக்களித்துள்ளது. இதன்படி 2015 ஜனவரி 9ஆம் திகதிக்கு முன்னர், இந்தியாவுக்கு சென்ற இலங்கை தமிழ் அகதிகளுக்கே இந்த தண்டனை விலக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக, த ஹிந்து செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இலங்கை தமிழ் அகதிகள், செல்லுபடியாகும் கடவுச் சீட்டுக்கள், பயண ஆவணங்கள் அல்லது விசா இல்லாமல் இருப்பது கண்டறியப்பட்டால்,அவர்களுக்கும் தண்டனை வழங்கப்படாது என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் தாமாக முன்வந்து இலங்கைக்குத் திரும்ப விரும்பும் இலங்கையின் தமிழ் அகதிகள்,விசா கட்டண ங்கள் மற்றும் தங்கியிருக்கும் காலத்தை விட அதிக காலம் இந்தியாவில் தங்கியிருந்தால் அதற்குரிய அபராதங்களையும் உள்துறை அமைச்சு தள்ளுபடி செய்துள்ளது.

# விடுதலைப்புலிகளின் மூத்த போராளி தூக்கில் தொங்கி மரணம்!

விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளி மகேந்தி என்பவர் பலா மரத்தில் இருந்து தூக்கில் தொங்கிய நிலையில் சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு – ஒட்டுசுட்டானில் தனது குடும்பத்துடன் வசித்து வந்த 55 வயதுடைய இராமப்பிள்ளை கமலராசா (மகேந்தி) என்பவர் அவரது வீட்டுக்கு முன்பாகவுள்ள பலா மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார். இவர் இந்தியப் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றதுடன் பிற்காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் முக்கிய பொறுப்பு வகித்துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

இது இவ்வாறிருக்க விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனின் மரணம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஒருவர் கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார்.

தலைவர் பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருப்பதாக போலித் தகவல்களை பரப்பி கனடாவில் பல்வேறு தரப்பினர் பணம் வசூலித்து வருவதாக அந்நாட்டில் வசிக்கும் புலம் பெயர் நபர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்த கோரிக்கையை அவர் முன்வைத்துள்ளார். அதன்படி வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பில் பின்வரும் கேள்விகள் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்கப்பட்டுள்ளது

இறுதிச் சடங்கு எப்போது நடத்தப்பட்டன?

இறுதிச் சடங்கு எங்கு நடைபெற்றன?

இறுதிச் சடங்கு எவ்வாறு செய்யப்பட்டது? ( உதாரணம் – தகனம்)

இறப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டதா? அப்படியானால், அதன் அதன் இலக்கம் மற்றும் பிரதேசம்.

இந்த நிலையில், 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மேற்கண்ட தகவல்களை தான் கோருவதாக மனித உரிமைகள் செயற் பாட்டாளர் சுட்டிக்காட்டியுள்ளார்

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
**416 755 5544**


# வடக்கில் நினைவேந்தலுக்கு அனுமதி அளித்து விட்டு இராணுவத்தை அரசாங்கம் வேட்டையாடுகிறது - நாமல்!



வடக்கில் நினைவேந்தலுக்கு முழுமையாக அனுமதியளித்து விட்டு இராணுவத்தினரை வேட்டையாடும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது. முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவின் நிலைமை இராணுவ அதிகாரிகளுக்கும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிர்காலத்தில் ஏற்படலாம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, இராணுவத்தினரை பாதுகாப்பதற்கு நிபந்தனையற்ற வகையில் நாங்கள் முன்னிலையாகும். இந்த அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினரை பழிவாங்கும் வகையில் செயற்படுகிறது. புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருத்திப்படுத்துவதற்காக இராணுவத்தினர் வேட்டையாடப்படுகிறார்கள்.

இராணுவத்தினரை பாதுகாக்கும் எமது செயற்பாட்டுக்கு மகாநாயக்க தேரர்களின் ஒத்துழைப்பை முழுமையாக எதிர்பார்க்கிறோம். ஏனெனில் அரசாங்கத்தை நல்வழிப்படுத்தும் பொறுப்பு மகாநாயக்க தேரர்களுக்கு உண்டு. முன்னாள் கடற்படைத்தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ளார். இவருக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலைமை இராணுவ அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிர்காலத்தில் ஏற்படலாம். இராணுவத்தினரை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகள் தற்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வடக்கில் நினைவேந்தலுக்கு முழுமையான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்றார்.

## முன்னாள் கடற்படைத் தளபதி கரன்னகொடவின் நூலுக்கு பிரித்தானியாவில் தடை!



முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட எழுதிய சுய சரிதை புத்தகம், பிரித்தானியாவில் Amazon விற்பனை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் எனும் அமைப்பின் கோரிக்கைக்கு அமைய எடுக்கப்பட்டதாக தெரிய வந்துள்ளது.

கரன்னாகொடவின் புத்தக விற்பனை பிரித்தானிய தடை சட்டங்களை மீறும் எனவும், தடைக்குட்பட்ட ஒருவருக்கு காப்புரிமை உள்ளிட்ட வளங்களை வழங்குவது குற்றமாக கருதப்படும் எனவும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் Amazonக்கு அறிவித்திருந்தது.

பிரித்தானிய சட்டத்தின்படி இத்தகைய மீறலுக்காக ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். Amazonபிரிட்டன் கிளை, சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் கோரிக்கைக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்துள்ளதாக அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

2005 முதல் 2009வரை உள்நாட்டுப் போரின் இறுதி கட்டத்தில் கடற்படைத் தளபதியாக பணியாற்றிய கரன்னாகொட மீது, நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் செய்ததாக குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, கடந்த மார்ச் மாதம், பிரித்தானிய அரசு வசந்த கரன்னாகொடவுக்கு தடை விதித்திருந்தது.

கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# நிலத்தைத் தோண்டும் போது எம்மவர்களின் எலும்புக்கூடுகள்- மயிலிட்டியில் அநுர உரை



நிலத்தை தோண்டும் போது எம்மவர்களின் எலும்புக்கூடுகள் கிடைக்கப் பெறும். செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் சர்ச்சைக்குரியதாக உள்ளது. இவ்விடயம் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். மறைப்பதற்கு ஏதும் எம்மிடமில்லை.இ னிவரும் காலங்களில் இலங்கையில் இவ்வாறான நிலை ஏற்படக்கூடாது. கொடூரமான அனுபவங்கள் மீண்டும் தோற்றம் பெறாத வகையில் அவை நினைவுகூரப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்தி பணிகளை 01 செப் 2025 திங்கட்கிழமை ஆரம்பித்து வைத்ததன் பின்னர் அங்கு உரையாற்றுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ஜனாதிபதி அங்கு மேலும் உரையாற்றியதாவது,

எமது மீனவர்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டும். இலங்கையின் பிரதான கேந்திரமையமாக கச்சத்தீவு காணப்படுகிறது. கச்சதீவு இன்று பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. நாட்டின் ஆட்புல எல்லைகளை பாதுகாத்து அவற்றை எதிர்கால தலைமுறையினருக்கு வழங்குவது எமது பொறுப்பாகும்.அந்த பொறுப்பை நிறைவேற்றும் கடப்பாடு எமக்கு உண்டு.

எமது தீவு, நிலம்,ஆகாயம் அனைத்தும் எமது மக்களுக்குரியது. கச்சத்தீவு விவகாரத்தில் எவ்வித அழுத்தங்களுக்கும் நாங்கள் அடிபணிய போவதில்லை என்றார்.

# இந்திய மக்களின் இழப்பில் பிராமணர்கள் லாபம் ஈட்டுகின்றார்கள் - டிரம்பின் ஆலோசகர்

இந்தியா ரஷ்ய கச்சா எண்ணெயை வாங்குவது குறித்து அமெரிக்க அதிபரின் வர்த்தக ஆலோசகர் பீட்டர் நவரோ மீண்டும் பேசியுள்ளார். பிராமணர்கள்' இந்திய மக்களின் இழப்பில் லாபம் ஈட்டுகிறார்கள் என்றும், இதை 'நிறுத்த வேண்டும்' என்றும் அந்த பேச்சில் நவரோ குறிப்பிட்டுள்ளார்.

டிரம்ப் நிர்வாகத்தில் வர்த்தகம் மற்றும் உற்பத்தி விவகாரங்களுக்கான மூத்த ஆலோசகரான நவரோ கடந்த ஞாயிற்றுக்கிழமை ஃபாக்ஸ் நியுஸுக்கு அளித்த பேட்டியில், 'பிரதமர் மோதி ஒரு சிறந்த தலை வர். இந்தியத் தலைவர்கள் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் எவ்வாறு ஒத்துழைக்கிறார்கள் என்பது புரியவில்லை? அதேசமயம் இந்தியா உலகின் மிகப்பெரிய ஜனநாயகம்' என்று கூறினார்.

நான் சொல்வதெல்லாம், இந்திய மக்களே, தயவு செய்து இங்கே என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். பிராமணர்கள் இந்திய மக்களின் இழப்பில் லாபம் ஈட்டுகிறார்கள். இதை நாம் நிறுத்த வேண்டும்' என்று நவரோ கூறினார்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் வர்த்தகம் மற்றும் வரிக் கொள்கைகள் தொடர்பாக அமெரிக்கா



விற்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்ட பின்னர், கடந்த சில நாட்களாக நவரோ தொடர்ந்து இந்தியாவை குறிவைத்து வருகிறார்.

# யாழ்ப்பாண விஜயத்தின் போது புலனாய்வு அதிகாரிகளை அலற வைத்த ஜனாதிபதி அநுர



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு 01 செப் 2025 சென்றிருந்த நிலையில் அவர் எப்போது யாழ்ப்பாணம் வருகின்றார்? யாழ்ப்பாணத்தில் எங்கு தங்கியிருக்கின்றார்? என்ற விடயம் புலனாய்வு அதிகாரிகள் உட்பட அரச பெருந்தலைகள் எவருக்கும் தெரியாமல் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார யாழ்ப்பாணத்துக்கு கடந்த 01.09.2025 ஆம் திகதி பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணத்தின் போது, முதலாவது நிகழ்வாக காலை 10.00 மணிக்கு மயிலிட்டி துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைப்பதாக இருந்தது.

ஜனாதிபதியின் பயணத்தை முன்னிட்டுப் புலனாய்வாளர்கள் உச்சக்கட்டக் கண்காணிப்பைச் செலுத்தியிருந்தனர். இதனால் 31ஆம் திகதி நள்ளிரவே ஜனாதிபதி இராணுவக் காவலரண்களை தாண்டி விட்டார் என்ற தகவல் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்துள்ளது.

எனினும் யாழ்ப்பாணத்துக்குள் ஜனாதிபதி நுழைந்து விட்டாரா? அவர் எங்கு சென்றார்? என்று அவர்களால் தொடர்ச்சியாக அறியமுடியவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியாத நிலையில் அதிகாலை பாதுகாப்பு வட்டாரங்களிலும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்திலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.


பின்னர் மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணிகளுக்காக எந்த வாகனத் தொடரணியும் இல்லாமல் தனி வாகனத்தில் ஜனாதிபதி சென்று இறங்கிய போதே, ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் தான் தங்கியிருந்தார் என்ற விடயம் புலனாய்வு அதிகாரிகளுக்கும் அரச வட்டாரங்களுக்கும் தெரியவந்துள்ளது.

அநுரகுமார ஜனாதிபதியாகப் பதவியேற்பதற்கு முன்னர், யாழ்ப்பாணத்துக்கு வரும் போதெல்லாம் தட்டாதெருச் சந்திக்கு அருகாக உள்ள வீடொன்றில் தங்கியிருப்பதே வழமை. இம்முறையும் அந்த வீட்டில் சென்றே தங்கியிருந்துள்ளார் என்று தெரிய வருகின்றது. ஜனாதிபதிக்கும் அரச புலனாய்வு அதிகாரிகளுக்கும் இடையில் ஒரு இடைவெளி காணப்படுகின்றதாக அண்மைக்காலமாக அரசல் புரசலாகச் செய்திகள் வெளிவந்திருந்தன.

ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான பாதுகாப்புப் படையணியே அவரின் பாதுகாப்பு விடயங்களை முற்றாகக் கையாண்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. இந்தத் தகவல்களை உண்மையாக்கும் வகையிலேயே இந்தச் சம்பவமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நாட்டு மக்களுக்கு கச்சத்தீவை பாதுகாக்கும் பொறுப்பை நிறைவேற்றுவேன். எந்தவொரு அழுத்தத்துக்கும் அடிபணிய போவதில்லை. மக்களின் முன்னேற்றத்துக்காகவே நாட்டின் வளங்கள் பயன்படுத்தப்படும், பாதுகாக்கப்படும் என்ற அவர் கச்சதீவுக்கும் சென்றிருந்தார். கச்சதீவுக்குச் சென்ற இலங்கையின் முதல் ஜனாதிபதியொருவர் என்ற பெருமையையும் பெற்றார்

# AI தொழில் நுட்பம் வரமா? சாபமா?




வளர்ந்து வரும் இந்த நவீன யுகத்தில் அனைத்து விடயங்களிலும் தொழில் நுட்பத்தின் உதவி மனிதனுக்கு தேவையாகவே உள்ளது. இருப்பினும் அந்த தொழிநுட்பத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எவ்வாறு பயன்படுத்த கூடாது என்ற விழிப்புணர்வை மனிதன் கொண்டிருக்க வேண்டும்.

தற்காலத்தில் அதிகம் பேசுபொருளாக உள்ளது தான் AI (artificial general intelligence) (Chat GPT) ஒருவகையில் இவை மனிதனின் வேலைகளை இலகு படுத்தினாலும் அவை சில நேரங்களில் மனித மூளையை கட்டுப்படுத்துகின்றன.

(ChatGPT) சாட்ஜிபிடியால் செயற்கை நுண்ணறிவு, மென்பொருள் குறியீடுகளை எழுதுவது, பிழைகளைச் சரிசெய்வது, எளிய தரவு பகுப்பாய்வு போன்ற பணிகளைத் திறம்படச் செய்ய முடியும்.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் (AI) அசுர வளர்ச்சி, பல துறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் நிலையில், தற்போது அது தொடர்பில் பல குற்றச்சாட்டுகளும் எழுந்து வருகிறது.

இதேவேளை, குறிப்பாக, சாட்ஜிபிடி (ChatGPT) போன்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான சேவைகளின் பயன்பாடு, அடுத்த சில ஆண்டுகளில் ஐடி துறையின் வருவாயைக் கடுமையாகப் பாதிக்கும் என்று ஒரு ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது.

AI தொழில்நுட்பத்தை பயன்படுத்த தொடங்கிய துறைகளில் வேலைவாய்ப்புகள் குறைந்துள்ளதாக சமீபத்தில் நடைபெற்ற ஆய்வில் தெரிய வந்துள்ளது. இவ்வாறாக பல துறைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் AI தொழில்நுட்பம் தற்போது மனித உயிரிழப்பு ஏற்பட காரணமாக அமைவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் அமெரிக்காவில் (ChatGPT) சாட்ஜிபிடி cldhd உரையாடல்களுக்கு பின்னர் 16 வயது சிறுவன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டதாக கூறி பெற்றோர் ஓபன் ஏஐ நிறுவனத்தின் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

ஆடம்ரெய்ன் என்ற 16 வயது சிறுவன், உயிரை மாய்த்துக் கொள்வது குறித்த சாட்ஜிபிடி உடன் விவாதித்த போது அதற்கு பதிலளிக்க மறுக்காமல் அதற்கான எண்ணங்களை சாட்ஜிபிடி மேலும் தூண்டியதாக பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

சான் பிரான்சிஸ்கோவில் உள்ள கலிபோர்னியா உயர் நீதிமன்றத்தில் தவறான மரணம், வடிவமைப்பு குறைபாடுகள் மற்றும் சாட்ஜிபிடி உடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்து எச்சரிக்கத் தவறியதற்காக ஓபன் யுஐ மீது 40 பக்க அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் வளர்ச்சியடைந்த தொழிநுட்பம் மனிதனுக்கு வரமா? சாபமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

# சிறப்பு அறிக்கையுடன் ஜெனிவா செல்லும் அரச குழு!

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இலங்கையின் சிறப்பு இராஜதந்திர குழு எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை ஜெனிவாவுக்கு விஜயம் செய்கிறது. தொடர்ந்தும் மூன்று நாட்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் கலந்து கொள்ள உள்ள இலங்கைக் குழு, உள்ளக விசாரணைகளுக்கான சர்வதேசத்தின் வழிகாட்டல்கள் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை கோருவதற்கு திட்டமிட்டுள்ளதுடன், பொறுப்புக்கூறலை முழுமையடைய செய்ய கால அவகாசத்தை அணுகவும் தீர்மானித்துள்ளது. அதே போன்று கடந்த ஒரு வருட கால முன்னேற்றத்தை எடுத்துரைக்கும் வகையில் முழுமையான அறிக்கையொன்று ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் சமர்ப்பிக்க உள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60வது மீளாய்வுக் கூட்டத்தொடர் செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகிறது. கடந்த கால மனித உரிமை மீறல்கள் குறித்த பொறுப்புக்கூறல் விவகாரத்தில் அரசாங்கம் மேலும் கால அவகாசத்தை கோரவுள்ளது.

இந்த கோரிக்கைக்கு வலு சேர்க்கும் வகையில், அடுத்த வருடம் வடக்கு மற்றும் கிழக்கில் மாகாண சபை தேர்தல்களை நடத்தி, அங்கு சிவில் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான நிலைப்பாட்டை இலங்கை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டினீக்ரோ, மற்றும் வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இலங்கைக்கான கேந்திரியக் குழு (Core Group on Sri Lanka) ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் செப்டம்பர் அமர்வில் ஒரு புதிய தீர்மானத்தை முன்வைக்கவுள்ளது. இந்த புதிய தீர்மானம், ஏற்கனவே உள்ள தீர்மானங்களை விட மென்மையான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கும் என இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை இந்த தீர்மானம் அங்கீகரிக்கும். இருப்பினும், கடந்த கால மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தை புதிய தீர்மானம் தொடர்ந்து வலியுறுத்தும் என அரச தரப்பு தகவல்கள் கூறுகின்றன. 51/1 தீர்மானத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் (Sri Lanka Accountability Project) என்ற பொறிமுறையை



தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதே இதன் பிரதான நோக்கமாக இருக்கும்.

மேலும் இந்த புதிய தீர்மானத்தை நேரடியாக பேச்சுவார்த்தை மூலம் எதிர்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், பன்னாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து, பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கத்தின் முழுமையான ஈடுபாட்டை உறுதிப்படுத்தவுள்ளார்.

செப்டம்பர் 8ஆம் திகதி அமர்வு தொடங்கும் போது, ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் இலங்கை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அவர் இலங்கைக்கு மேற்கொண்ட சமீபத்திய விஜயத்தின் அடிப்படையிலான இந்த அறிக்கை, புதிய பரிந்துரைகளை உள்ளடக்கியிருக்கும். அதன் பின்னர், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிப்பார்.

# இலங்கையின் ஊழல் எதிர்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிப்போம்! டிரான்ஸ்பேரன்சி இன்டநஷனல் உறுதியாகத் தெரிவிப்பு!



இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்க அரச நிறுவனங்களுக்குள் உள் விவகாரப் பிரிவுகளை நிறுவுவதையும், ஊழல் எதிர்ப்பு இலக்குகளை முன்னேற்றுவதில் அரசாங்கமும் சிவில் சமூகமும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் தலைவர் பிரான்சுவா வெலரியன் இலங்கையின் ஊழல் எதிர்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிக்க டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் உறுதி பூண்டுள்ளது என்றும் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் தலைவர் பிரான்சுவா வெலரியன் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் 30 ஆகஸ்ட் 2025 சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

அரச மற்றும் தனியார் துறைகளில் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான முயற்சிகளை பிரான்சுவா வெலரியனுக்கு விளக்கிய ஜனாதிபதியின் செயலாளர், ஊழல் எதிர்ப்பு இயந்திரத்தை வலுப்படுத்த அரசாங்கம் பல புதிய திட்டங்களைத் தொடங்கியுள்ளது என்றும் அவை ஏற்கனவே குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன என்றும் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழித்தல் அரச நிதியை திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் நாட்டில் சிறந்த கலாச்சாரத்தை உருவாக்குதல் ஆகிய பரந்த நோக்கங்களுடன் லஞ்சம் மற்றும் ஊழல் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கூறினார்.

இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுக்க அரச நிறுவனங்களுக்குள் உள் விவகாரப் பிரிவுகளை நிறுவுவதையும், கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளையும் பாராட்டிய டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனலின் தலைவர், ஊழல் எதிர்ப்பு இலக்குகளை முன்னேற்றுவதில் அரசாங்கமும் சிவில் சமூகமும் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இலங்கையின் ஊழல் எதிர்ப்புத் திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளிக்க டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் உறுதி பூண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

# ஊழல் செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்க வேண்டும் - சரத்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை 400 ஆண்டுகள் சிறையில் அடைக்க வேண்டும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார். 2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்களை எடுத்துக்காட்டி, அவர் குற்றம் சாட்டியதாக தெரிவிக்கப்படுகிறது.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், அடுத்தடுத்து வந்த இலங்கைத் தலைவர்களை விமர்சித்தார். இதன்போது தேசிய வளர்ச்சிக்கான தொலைநோக்கு பார்வை, இலங்கை தலைவர்களுக்கு இல்லை என இதன்போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூரின் லீ குவான் யூ , மலேசியாவின் மகாதீர் முகமட் மற்றும் ருவாண்டாவின் ஜெனரல் ஜூவெனல் ஹப்யரிமனா போன்ற சர்வதேச பிரமுகர்களுடன் இலங்கை முன்னாள் தலைவர்களை ஒப்பிட்டு வேறுபடுத்தி இதன் போது அவர் உரையாற்றியுள்ளார்.

தனிநபர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் கடந்த கால சம்பவத்தைக் குறிப்பிட்டு தமது கருத்துக்களை சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

2010ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிகால பகுதியில் சீனாவிற்கு மேற்கொண்ட அரச பயணத்தையும்



இதன்போது அவர் நினைவுபடுத்தினார். அந்த பயணத்தின் போது 65 பேர் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் உத்தியோகபூர்வமாக அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கைகளை அவர் மன்னிக்கவில்லை என்றாலும், அதிகாரிகளை பொறுப்புக்கூற வைப்பதில் தற்போதைய நிர்வாகம் வகுத்த முன்னுதாரணத்தை ஆதரிப்பதாகவும் சரத் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி ரணில் விக்கிரமசிங்க செய்தது சரி என நான் கூறவில்லை. அவரது நிலையை பார்ப்பது எனக்கு கவலையாக இருக்கிறது. அவர்தான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தவர். ஆனால் இந்த வழக்கில், அரசாங்கம் அமைத்த முன்னுதாரணத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் என இதன்போது சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

அதேநேரம் மஹிந்த ராஜபக்ஷ போன்ற ஒருவருக்கு சுமார் 400 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நாமல் ராஜபக்ஷவின் கடந்த கால சிறைத்தண்டனை குறித்து சமீபத்தில் தெரிவித்த கருத்துகளுக்கும் சரத் பொன்சேகா பதிலளித்தார். இராணுவத் தலைமையகத்தில் பணியாற்றிய 35 சிரேஸ்ட இராணுவ அதிகாரிகளை ஓய்வூதியம் இல்லாமல் இராணுவ சேவையிலிருந்து வெளியேற்றியதாக மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மீது சரத் பொன்சேகா நிகழ்வில் உரையாற்றும் போது குற்றம் சுமத்தியுள்ளார்.

நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமை பேரவையின் போது நாட்டை பாதுகாத்த படைவீரர்களை காட்டிக் கொடுக்கும் சதித்திட்டம் ஒன்று இடம் பெறவுள்தாக தெரியவருகிறது. அரசாங்கம் அதற்கு இடமளிக்கக் கூடாது என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார்.

# கோட்டாபயவுக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க, இரண்டு தனித்தனி முறைப்பாடுகள் தொடர்பாக வாக்குமூலம் அளிக்க குற்றப் புலனாய்வு திணைக் களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

காலி முகத்திடலில் நடைபெற்ற போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கட்டுப்படுத்தத் தவறியமை தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில், கோட்டாபய ராஜபக்ச வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. எனினும், அவர் ஆஜராக வேண்டிய திகதி இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் இங்கிலாந்து பயணம் தொடர்பாக அரச



நிதி தவறாக பயன்படுத்தப்பட்டதாக உள்ள குற்றச் சாட்டில், வாக்குமூலம் அளிக்க சமன் ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

# தடுத்து வைக்கப்பட்டுள்ள சாமல் ராஜபக்ஷாவின் மகன் சஷேந்திரவுக்கு 4000 கோடி மதிப்புள்ள சொத்துக்கள்!



நிதி மோசடி வழக்கில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள் முன்னாள் அமைச்சரும் சாமல் ராஜபக்ஷாவின் மகனுமான சஷேந்திர ராஜ பக்ஷவிற்கு 4000 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து கள் மற்றும் வங்கிக் கணக்குகள் உள்ளதாக தகவல் கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரும் முன்னாள் அமைச்சருமான சமல் ராஜபக்ஷவின் மகனான சஷேந்திர ராஜபக்ஷ, அரசியலில் முன்னதாக ஊவா மாகாண சபையின் தலைவராகவும், பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராக வும் இராஜாங்க அமைச்சராகவும் பணியாற்றினார்.

அவரிடம், BMW கார், ஏ8 வகை கார், நிஷான் வகை பெட்ரோல் கார் மற்றும் யாரிஸ் வகை கார் போன்ற நான்கு ஆடம்பர மோட்டார் வாகனங்கள் உள்ளன. இவை மனோஜ் ஏகநாயக்க என்ற எழுத்தாளரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

அத்துடன் சஷேந்திர ராஜபக்ஷவிற்கு நுகேகொடை, நாவல வீதியில் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள சொகுசு வீடு மற்றும் நிலமும், பாலவத்த வீதியில் 11 கோடி ரூபாய் மதிப்புள்ள வீடும், கொழும்பு 7, ரோஸ்மீட் பிரதேசத்தில் 4 அடுக்கு கொண்ட 55 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆடம்பர வீடும், தெஹிவளையில் 24 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலம் மற்றும் நாரஹென்பிட்டவில் 20 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலமும் இருப்பதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

இவை தவிர நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான, பத்தரமுல்லையில் 70 பெர்ச் அளவுள்ள ஒரு நிலத்தை, சஷேந்திர ராஜபக்ஷ, தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி, தவறான ஆவணங் களை உருவாக்கி, தனது பெயரில் பெற்றுள்ளார். அதன் மதிப்பு 70 கோடி ரூபாய் ஆகும்.

அத்துடன் சீதுவ பிரதேசத்தில் ஒரு வீடு மற்றும் நிலம் 300 கோடி மதிப்பில் சமீபத்தில் விற்கப்பட்ட தாகவும், கதிர்காமம் பிரதேசத்தில் ஒரு ஹோட்டல் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் சஷீந்திர ராஜபக்ஷவிடம், அவுஸ்திரேலியாவில் சொகுசு வீடுகள் இரண்டு உள்ளன. அவற்றை அங்கு அவரது மகன் கண்காணிக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

இவை தவிர, சஷேந்திர ராஜபக்ஷவிடம் இன்னும் அதிகமான சொத்துக்கள் இருப்பதாக ஊகிக்கப்பட்டு வருகிறது. சில சொத்துக்கள் அவர் பெயரிலும், சில நெருக்கமான நபர்களின் பெயரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முழுமையான விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட பாதாளஉலகக் கும்பலைக் கைது செய்ய இந்தோனேசிய பொலிசாருக்கு பாராட்டு



கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட குழுவினரை கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தோ னேசிய பொலிஸ் அதிகாரிகளுக்கு பாராட்டு தெரி விக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன. இந்த நடவடிக்கையில் இணைந்த இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் பாராட்டு தெரிவித் துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த பாதாள உலகக் குழுத் தலைவர்கள் ஐவர், 30 ஆகஸ்ட் 025 சனிக் கிழமை இரவு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

சந்தேகநபர்களைக் கைது செய்து அழைத்து வரு வதில் முன்னிலை வகித்த இந்தோனேசிய பொலிஸ் அதிகாரிகளையும், இதில் பங்கேற்ற இலங்கை பொலிஸ் அதிகாரிகளையும் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த



விஜேபால மற்றும் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோர் வரவேற்றனர்.

இது தொடர்பாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜே பால பாதாள குழுவினர் கைது செய்யப் பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அரசியல்வாதிகளு க்கும் பாதாள குழுக்களுக்கும் இடையில் நெருக்க மான தொடர்பு உண்டு. கைது செய்யப்பட்டவர் களிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப் படும். பாதாள குழுக்களை வெகுவிரைவில் முடிவு க்கு கொண்டு வருவோம் என்று நாட்டு மக்களுக்கு உறுதியளிக்கிறோம் தெரிவித்த அவர்

மேலும் தெரிவித்ததாவது, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களின் பிரதான நபர்களாக செயற்பட்ட கெஹல்பத்தரே பத்ம, கமாண்டர் சலிது உட்பட குற்றவாளிகள் ஐந்து பேரை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளோம். குற்றப் புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர் விசாரணைகள் முன்னெடு க்கப்படுகின்றன.

# தமிழ்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டியது என்ன?

தேவைக்கு அதிகமாக ,ராணுவ பிரசன்னத்தை எதிர்த்து தமிழ்கட்சிகள் கையெழுத்து சேகரிக்கின் றன. இது போன்ற கையெழுத்து சேகரிக்கும் செயல்பாடுகள் கடந்த காலத்திலும் பல சந்தர்ப் பங்களில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால், அவைகள் எந்தவோர் அரசியல் தாக்கத்தையும் ஏற்படுத்தியமைக்கு சான்றுகள் இல்லை. இது அரசியல் கட்சிகளும் அறியாத விடயமல்ல.

ஆனாலும் வேறு எதனையும் செய்ய முடியாத நிலையிலும், எதற்கு முன்னுரிமை வழங்க வேண் டுமோ, அவ்வாறான விடயத்தில் ஒன்றுபட்டுச் செயல்பட முடியாத நிலையில் தான், இவ்வாறான நாற்காலிப் போராட்டங்களிலும் காட்போர்ட் போரா ட்டங்களிலும் நமது கட்சிகள் என்பவை, மீண்டும், மீண்டும் ஒன்றுபட்டுக் கொள்கின்றனவா?

இந்த அடிப்படையில் நோக்கினால், தமிழில் கூறியது கூறல் என்பது போல் தான், தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையும் செயல்பாடுகளும் இருக்கின்றன?

சொன்னதைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு கட்சிகள் தேவையில்லை, அதற்கு சாதாரண சமூக மட்ட அமைப்புக்களே போதுமானது.

அரசியல் கட்சிகள் என்பவை காலத்தை புரிந்து கொண்டு, அதற்கு பொருத்தமான நடவடிக்கை களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண் டும். இன்று கையெழுத்துப் பெறுவதற்காக ஒன்று பட்டிருக்கும் கட்சிகளால் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்னுமடிப்படையில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள முடியாதா? ,

இந்த இடத்தில் தான் தமிழ் கட்சிகள் என்பவை தொடர்ந்தும் கூட்டத்தில் சத்தமெழுப்பும் கட்சி களாக மட்டுமே சுருங்கிப் போகின்றன. மாகாண சபை தொடர்பில் இதுவரையில் இருந்து வந்த ஒரு முக்கிய விடயம் மாறிவிட்டது என்பதை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் என்போரால் புரிந்து கொள்ள முடிகின்றதா?

இதுவரையில் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை இந்தியா பார்த்துக் கொள்ளும் என்னும் பார்வை யொன்று தமிழர் அரசியலில் மேலோங்கியிருந்தது. இந்தியாவிடம் முறையிடுகின்றோம் என்பதை ஓர் அரசியலாகவே தமிழ் கட்சிகள் அவ்வப்போது முன் வைத்து வந்திருக்கின்றன.

ஆனால், இந்த அணுகுமுறை இனி கைகொடுக்கப் போவதில்லை ஏனெனில், தமிழ் கட்சிகள் விடயத் தில் ஒன்றுபட்டு செயல்பட்டால் ஒழிய இந்த விடயத்தில் இந்தியா இனித் தலையீடு செய்வதற் கான வாய்ப்பில்லை.

மாறி வரும் உலக அரசியல் சூழலில் அயல்நாடு களில் இந்தியாவின் தலையிடும் தேவைப்பாடு மாறி விட்டது. குறிப்பாக இலங்கை விடயத்தில், அதி லும் குறிப்பாக தமிழர் விடயத்தை அடிப்படை யாகக் கொண்டு தலையீடு செய்யும் அரசியல் சூழல் இப்போது மிகவும் பலவீனமாகிவிட்டது.

இந்தியாவிற்கு எதிர் நிலையில் இருக்கும் ஒரு நாடு இலங்கையின் உள் விடயத்தில் தலையீடு செய்தால் மட்டும் தான் இந்தியா இனித் திரும்பும் என்னும் நிலைமை தான் காணப்படுகின்றது. அப்படியான வாய்ப்பும் இல்லை. இந்தப் பின்புலத் தில் சிந்தித்தால், மாகாண சபைத் தேர்தல் முதல் கொண்டு அதிகாரங்களை முழுமையாக பயன்படுத் தும் விடயம் வரையில், தமிழ் கட்சிகள் தான் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும்.

மாகாண சபை விவகாரத்தை ஜனநாயகத்திற்கான குரலாகவும் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கான குரலாகவும் மாற்றியமைக்க வேண்டும். வெறுமனே அதிகாரப் பகிர்விற்கான ஒரு விடயமாக மாகாண சபையை இனியும் முன்னிறுத்த முடியாது.

ஆனால், இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இணையக்கூடிய கட்சிகள் ஏன் தொட ர்ந்தும் தங்களின் கவனத்தை வேறு விடயங்களை நோக்கி குவிக்கின்றன? ஏன் இதனை புரிந்து கொண்டு செயல்படமுடியாமல் இருக்கின்றனர்? இவர்களை தடுக்கின்ற காரணி தான் என்ன? அல்லது தமிழ் மக்களுக்கு ஆகக் குறைந்த விடயங்கள் கூட கிடைத்து விடக் கூடாது என்ப தில் மட்டும் தான் இந்தக் கட்சிகள் உறுதியாக இருக்கின்றனவா?

# வரி விதிப்பு இல்லையென்றால் அமெரிக்கா அழிந்து விடும் - ட்ரம்ப்

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரி விதிப்பு சட்டவிரோதமானது என அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் மீண்டும் பொறுப்பேற்ற பின்னர், உலக நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குப் பரஸ்பர வரி விதிப்பு அறிவிப்பை வெளியிட்டார். இலங்கை, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரியை விதித்தார்.

டிரம்ப்பின் இந்த வரி விதிப்புக்கு எதிராக அமெரிக்காவின் நியூயோர்க்க நகர வர்த்தக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம், டிரம்பின் இந்த உத்தரவுகள் அதிகார வரம்பு மீறியவை என விமர்சித்து அவற்றை ரத்து செய்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து அமெரிக்க அரசு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், டிரம்ப் விதித்த வரிகள் சட்டவிரோதமானவை என்றும், இத்தகைய வரிகளை விதிக்க அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பு குறித்து தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ள டிரம்ப், 'நமது நாடு முற்றிலுமாக அழிந்து விடும், நமது இராணுவ சக்தி உடனடியாக அழிக்கப்படும்' என்று எச்சரித்துள்ளார்.

மேலும், 'பொருட்களின் விலைகள் மிகவும் குறைந்து விட்டன, பண வீக்கம் இல்லை. எரிசக்தி விலைகள் பெரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளன. பல ஆண்டுகளாக நம்மை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட நாடுகளிடமிருந்து டிரில்லியன் கணக்கான டொலர்களைக் கொண்டு வரும் வரிகள், அமெரிக்காவை மீண்டும் வலிமையாகவும் மரியாதைக்குரியதாகவும் ஆக்குகின்றன' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பாலஸ்தீன கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் மீதான விசா கட்டுப்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளார். அத்துடன் பார்வையாளர் விசாக்களுக்கான அனுமதிகளும் நிறுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இடை நீக்கம், மருத்துவ சிகிச்சை, பல்கலைக்கழக படிப்பு, வணிகப் பயணம் மற்றும் நண்பர்கள் அல்லது குடும்பத்தினரைப் பார்ப்பதற்கான விண்ணப்பங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி இந்த விசா கட்டுப்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி அமெரிக்க தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலில் இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த புதிய திட்டம் காசாவில் வசிப்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த புதிய திட்டம் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள பாலஸ்தீனியர்களையும் இலக்கு



வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இம்மாத ஆரம்பத்தில் பாலஸ்தீன விடுதலை அமைப்பு மற்றும் பாலஸ்தீன ஆணையகத்தின் உறுப்பினர்களின் விசாக்களையும் இரத்து செய்துள்ளார்.

இதனால் பாலஸ்தீன விடுதலை அமைப்பு மற்றும் பாலஸ்தீன ஆணையகத்தின் உறுப்பினர்கள் நியூயோர்க்கில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையில் கலந்து கொள்ள தடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தேசிய பாதுகாப்பை அடிப்படையாக கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பாலஸ்தீனத் தலைவர்கள் பயங்கரவாதத்தை கைவிடத் தவறிவிட்டதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் நிர்வாகம் குற்றம் சாட்டியுள்ளனர்.

அவர் மேலும் கூறுகையில், 'இந்தியர்கள் இந்த விஷயத்தில் மிகவும் பிடிவாதமானவர்கள் என்பது என்னைத் தொந்தரவு செய்கிறது.

நாங்கள் அதிக வரி விதிக்கவில்லை, இது எங்கள் இறையாண்மை. நாம் எங்கிருந்து வேண்டுமானாலும், யாரிடமிருந்து வேண்டுமானாலும் எண்ணெய் வாங்கலாம்.' என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தியா, நீங்கள் உலகின் மிகப்பெரிய ஜனநாயகம், அதற்கேற்ப நடந்து கொள்ளுங்கள்.' என்றார்.




# புத்திசாலிக் காகம் நரியை ஏமாற்றியதை ஒத்திகை என்றால்....

கட்டுரையாளர்:- பனங்காட்டான்

வடை கேட்ட நரியிடம் காகம் ஒன்று ஏமாந்தது பழைய கதை. நவீன காலக் காகம் வடையைக் காலுக்குள் வைத்துக் கொண்டு நரியை ஏமாற்றியது புதுக்கதை. ரணிலின் கைதையும் விளக்கமறியலையும் நவீன காலக் காகத்துடன் பொருத்திப் பார்க்கலாம். முதல் ஒத்திகையின் வெற்றி இதனை தொடர்கதையாக்குமா?

ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் அறுபதாவது கூட்டத் தொடர் அடுத்த ஒரு வாரத்தில் - செப்டம்பர் 8ம் திகதி ஆரம்பமாகி அக்டோபர் 8 வரை இடம்பெறவுள்ளது. முன்னர்போல இம்முறையும் இலங்கை தொடர்பான தீர்மானம் புதுப்பிக்கப்படவுள்ளது.

மனித உரிமைகள் பேரவை என்பது விசாரணை செய்து உண்மையை அறிந்து நீதி வழங்கும் மன்றல்ல எனினும், விடயத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வழிகாட்டும் என்ற நம்பிக்கையே இத்தீர்மானங்களில் கவனம் செலுத்த வைக்கிறது.







இலங்கைத் தமிழரைப் பொறுத்தளவில் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, நம்பிக்கையீனங்கள் மத்தியிலும் நம்பிக்கையின் எதிர்பார்ப்பில் தீர்மானங்கள் பார்க்கப்படுகின்றன. இந்தப் பின்னணியில் தமிழ் அரசியல் கட்சிகளும், தமிழரின் சிவில் அமைப்புகளும் தொடர்ந்து கடிதங்களையும் சமர்ப்பணங்களையும் அனுப்பி வருகின்றன.

ஜெனிவா விடயத்தில் கூட தாங்கள் ஒன்றுபட மாட்டோம் என்பதை சிங்கள அரசுக்கு மட்டுமன்றி சர்வதேசத்துக்கும் ஜெனிவா ஊடாக தமிழ் தலைவர்கள் தொடர்ந்து காட்டி வருகின்றனர். இதன் அடையாளமே இவர்கள் தனித்தனியாக அனுப்பும் கடிதங்கள். பேரவையின் ஆணையாளர் சில வாரங்களுக்கு முன்னர் இங்கு வருகை தந்து பலரையும் சந்தித்து, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்குச் சென்றிருந்த போது இதனை அறிந்திருப்பார்.

செப்டம்பர் 8ல் ஆரம்பமாகும் அமர்வில் புதிய வரைபு தீர்மானமாக வைக்கப்படும். வழமை போன்று இலங்கை அரசு அனைத்தையும் மறுதலிக்கும். இலங்கையில் ஆட்சி மாறினாலும் சிங்கள ஆட்சியே தொடருகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் படையினரைப் பாதுகாப்பதிலும் சர்வதேச பொறிமுறை விசாரணையை நிராகரிப்பதிலும் அவர்கள் அசையாது செயற்படுகிறார்கள்.

ஜெனிவா என்பது ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் 2009 முள்ளிவாய்க்காலுக்குப் பின்னர் திறக்கப்பட்ட கதவு. சிங்கள தேசத்தைப் பொறுத்தளவில் இதனை முதன்முதலாக தள்ளித் திறந்தவர் மகிந்த ராஜபக்ச. பிரேமதாசவின் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. இளைஞர்களும் ஆதரவாளர்களும் படுகொலை செய்யப்பட்டதை வெளியுலகத்துக்கு எடுத்துச் செல்லும் நீதி விசாரணைக்காக 1990 - 1991களில் ஜெனிவா மனித உரிமைப் பேரவைக்கு எடுத்துச் சென்றவர் இவரே. அந்த நாட்களை மகிந்த - ஜே.வி.வி.யின் தேநிலவுக் காலமென அரசியல் அரங்கில் அழைப்பர்.

அன்று தனது நடவடிக்கைகளை தேசப்பற்று என்று கூறிய இவரே, 2009 முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு ஜெனிவா நோக்கிச் சென்றவர்களைப் பார்த்து தேசத்துரோகிகள் என்று பட்டம் சூட்டியவர். அத்துடன் இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை வன்மையாக எதிர்த்தவரும் இவரே. 2004 - 2008 காலப்பகுதியில் மனித உரிமைகள் பேரவை ஆணையாளராகவிருந்த கனடிய நீதியரசரான லூயிஸ் ஆர்பரை வெள்ளைத்தோல் புலி எனவும், 2008 - 2014 காலத்தில் ஆணையாளராக விருந்த நவநீதம்பிள்ளையை தமிழ்ப் புலி என்றும் நாமம் சூட்டியவர்கள் மகிந்தவும் அவரது அணியினருமே.

சிலி நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான மிச்சேல் பச்சலற் அம்மையார் 2018ல் மனித உரிமைகள் ஆணையாளராக நியமனமானதையடுத்து வெளியிட்ட முக்கிய அறிக்கைகள் இலங்கை மீதான கடுமையான நடைமுறைகளை மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு வழி வகுத்ததாயினும் இறுதியில் எதனையுமே நிலைநாட்ட முடியாது போய்விட்டது.

இப்போது அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் காணாமற்போனோரின் எலும்புக்கூடுகளும் எச்சங்களும் இனப்படுகொலையின் மறக்க முடியாத சாட்சிகளாகவுள்ளன. இதனை தற்போதைய அநுர குமர அரசும் நன்கறியும். இந்த விடயம் ஜெனிவாவில் முக்கியமானதாக பிரஸ்தாபிக்கப்படும் என்பதும் இவர்கள் அறிவர்.

இதன் காரணமாகவே சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி அகழ்வை மறுக்காமலும் மறைக்காமலும் சட்டரீதியாக பூரண ஆதரவு வழங்குவதாக வெளியுலகுக்கு காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஜெனிவாவின் அறுபதாவது அமர்வு முடிவடைந்த பின்னரே அநுர குமர அரசு இவ்விடயத்தில் என்ன முடிவெடுக்கும் என்பது தெரியவரும்.

புதைகுழிகளை ஆழமாக்க ஸ்கானர் வழங்குவதும், நீதிமன்றம் ஊடாக தேவையான பாதுகாப்பை வழங்குவதும், அமைச்சர்கள் நேரடியாகச் சென்று புதைகுழியை பார்வையிடுவதும், செப்டம்பர் முதலாம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாண விஜயத்தின் போது இவ்விடத்தைச் சென்று பார்வையிடக்கூடும் என்று அறிவிப்பதும் நீதி வழங்கப்படுகிறது என்பதன் அர்த்தமாகாது. அவ்வாறு எடுத்துக் கொள்ளவும் முடியாது. அப்பாவி மனிதர்களின் எச்சங்களை அடையாளம் காணவும், கொலைஞர்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவும் சர்வதேச உதவி அவசியம். இதனையே இப்போது பாதிக்கப்பட்ட சமூகம் கேட்கிறது.

சர்வதேச நீதிப் பொறிமுறையிலிருந்து தப்புவதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தியதாக பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியாக இருந்த ஒருவரையே அவர் இழைத்த குற்றத்துக்காக உள்நாட்டு நீதிப்பொறிமுறை வழியாக அவரைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்தது என்றால், தமிழினப் படுகொலைக்கும் இதே உள்நாட்டுப் பொறிமுறையில் நீதி வழங்க முடியாது என்று எதற்காக சந்தேகப்பட வேண்டுமென்ற கருத்தை இதனூடாக அரசாங்கம் மெதுவாக பரவ விட்டுள்ளது என்பதை மறுக்க முடியாதுள்ளது.

ரணிலின் மீதான குற்றப்பத்திரிகை இதுவரை முழுமையாக பகிரங்கப் படுத்தப்படவில்லை. இவர் மீதான குற்ற விசாரணை எப்போது ஆரம்பமாகி எப்போது முடிவடைந்து, எவ்வகையான தண்டனை வழங்கப்படுமென்பதும் எவருக்கும் தெரியாது. சில சமயம் இவர் குற்றமற்றவர் எனக் கூறி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படலாம்.

ஓரிரவு கூட சிறைச்சாலையில் தங்கியிருக்காது, மருத்துவமனை படுக்கையில் அதிமிகு பராமரிப்பில், வீட்டிலிருந்து வந்த உணவை உட்கொள்ள அனுமதிக்கப்பட்ட இவர், நான்காம் நாள் பிணை கிடைத்ததும் எழுந்து வீடு சென்றுள்ளார். வழக்கமாக அரசியல்வாதிகளுக்கு விளக்கமறியலில் வைக்கப்படும் போது வரும் நோய்களும் மருத்துவ உதவிகளும் இவருக்கும் வந்தன.

கைது செய்யப்படும் வரை அரசியலில் தீவிரமாக இயங்கி வந்ததோடு ஜே.வி.பி. அரசை விமர்சித்து வந்த இவருக்கு விளக்கமறியல் தீர்ப்பு வந்ததும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதய அடைப்பு என்ற பட்டியலை மருத்துவர்களும் வழக்கறிஞர்களும் வெளியிட்டனர். இவ்வாறான பயங்கர நோய்களுடைய ரணிலால் இனி அரசியலில் செயற்பட முடியாதென நையாண்டி செய்ய வைத்துள்ளது இந்த மருத்துவ அறிக்கை.

அநுர குமர அரசாங்கத்தை 'எல் போட் என கேலி பண்ணியவருக்கு அந்த எல் போட் தனது பலத்தைக் காட்டியுள்ளது. சர்வதேச புகழ் பெற்ற ஒரேயொரு இலங்கை அரசியல்வாதியென வர்ணிக்கப்படும் ரணிலுக்கு உள்நாட்டில் செல்வாக்கு இல்லையென்பதை கடந்த கால தேர்தல்கள் மட்டுமன்றி அவரது விளக்கமறியல் காலமும் எடுத்துக் காட்டியுள்ளது. இதுவரை அவரது கைதைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் எந்தவொரு ஆர்ப்பாட்டமோ, அரசுக்கெதிரான போராட்டமோ இடம்பெறவில்லை என்பது தெரிய வந்துள்ளது. மேலும் பல தலைகளை கைது செய்வதற்கான ஒத்திகை அநுர குமர அரசுக்கு ஒரு நம்பிக்கையளித்துள்ளதென அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

கோதபாய ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச குடும்பத்தில் இருவர் அல்லது மூவர், சஜித் பிரேமதாசவும் மனைவியும் கைது வலையில் இருப்பவர்களென ஊடகங்கள் எழுத ஆரம்பித்துவிட்டன. ரணில் விக்கிரமசிங்கவின் கைதையும் விளக்கமறியலையும் ஒரு சமூக ஊடகமே முற்கூட்டி அறிவித்தது என்பதைப் பார்க்கும் போது, இதுபோன்ற ஊடக அறிவிப்புகளை தவிர்க்க முடியாதுள்ளது. இதனை எவராலும் மறுக்கவும் முடியாதுள்ளது.

வடை கேட்ட நரியிடம் காகம் ஒன்று ஏமாந்தது பழைய கதை. நவீன காலக் காகம் வடையைக் காலுக்குள் வைத்துக் கொண்டு நரியை ஏமாற்றியது புதுக்கதை. ரணிலின் கைதையும் விளக்கமறியலையும் நவீன காகத்துடன் பொருத்திப் பார்க்கலாம். முதல் ஒத்திகையின் வெற்றி இதனை தொடர்கதையாக்குமா?

## இலங்கை அரசின் இனஅழிப்புக்கு

(2ம் பக்த் தொடர்ச்சி) ஐ.நா பொதுச்சபைக்குப் பரிந்துரைக்கப்படல் என்பவற்றுக்கான கூறுகள் புதிய பிரேரணையில் உள்ளட க்கப்படவேண்டும்.

அத்தோடு படையினரால் கையகப்படு த்தப்பட்ட காணிகளை விடுவித்தல், தமிழர் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்தல், மீள்குடியேற்றம், நிலையான வாழ்வாதாரம் உள்ளிட்ட நடவடிக்கைகளைத் திட்டமிட்டு முன்னெடுப்பதற்கு சர்வ தேச அனுசரணையுடன் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், ஐ.நா நிபுணர்கள் உள் ளிட்டோரின் பங்கேற்புடன் இடைக் கால உள்ளகக் கட்டமைப்பொன்று நிறுவப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

25 ஆகஸ்ட் 2025 முதல் 05 செப்டம்பர் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதரர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்ப நாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப் பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 24வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2025 திங்கட்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31வது 5வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்

### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 31வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 5வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 22 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



25 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஜிதன் பிரசாந்தி இணையர்களின் செல்வப்புதல்வி செல்வி சக்தி ரஜிதன் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி புனிதவதி தயாளன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி புனிதவதி தயாளன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை யாழ்.தொல்புரத்தைச் சேர்ந்த திருசிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி இணையர்களின் செல்வப்புதல்வி திவ்வியா நந்தகுமாரின் 16வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி திவ்வியா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் கிழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள் சகோதரங்கள் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வாழும் திரு மாசிலாமணி ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்களது 57வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு மாசிலாமணி ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்கள் 30 ஆகஸ்ட் 2025 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



04 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 14வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



04 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை நோர்வேயில் வசிக்கும் செல்வன் பிரசாந்தன் அவர்களும் செல்வி கோபிதா அவர்களும் இனிய இரு மனம் இணையும் நன்நாளாகும். அன்றைய தினம் இருவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். வாழ்க வளமுடன் என்று பாரதி இல்லக் குழந்தைகள் வாழ்த்தி மகிழ்கின்றார்கள்





ஓம்
கனடா இந்து மாமன்றம்
பெருமையுடன் வழங்கும்
இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் சமயப் பெரியார் அவர்களின் சிறப்பு நிகழ்வு
"அல்லல் போம்... வல்வினை போம்..."
(ஆன்மீகச் சொற்பொழிவு)
சுவாமி ஸ்ரீ இரமண சுவரூபானந்தா
ஸ்ரீ அருணாசல இரமண ஆத்ம வித்யா மந்திர்
திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா
www.atmavidyamandir.org
இடம்: ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
காலம்: செப்டம்பர் 7, 2025 ஞாயிற்றுக்கிழமை, மாலை 7:00 மணி
இந்து மத உலகில் ஆன்மீக பரம்பொருள் என்று போற்றப்படும் பகவான் ஸ்ரீ அருணாசல இரமண மகரிஷியின் ஆழ்ந்த பக்தரும், ஆன்மீக சாதகருமாகிய சுவாமி இரமண சுவரூபானந்தா அவர்கள் கனடா வருகை தந்துள்ளார். அவரின் திருவாய் அமுதம் என போற்றும் படியான சொற்பொழிவினை கேட்கும் அரிய வாய்ப்பு ரொறன்ரோ வாழ் தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. இவர் இந்தியா மற்றும் இலங்கையில் தெய்வபணி ஆற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.
இன்றைய இயந்திர உலகில் நாம் அமைதியுடன், மன மகிழ்வுடன் வாழ எம்மை இறைபக்தர்களாக ஆன்மீகத்தில் சங்கமிக்க அன்பர்கள் அடியார்கள் அனைவரும் சுவாமிஜி அவர்களின் அருள்வாக்கில் கலந்து சிறப்பித்து அவரின் நல்லாசிகளுடன் பயன் பெற்றேகுமாறு கனடா இந்து மாமன்றம் கனிவோடு அழைக்கின்றது.
தொடர்புகளுக்கு: கண்ணன் 905.785.6526 / சிறிஜெயநாதன்: 647.992.0587 / அமிர்தி: 647.620.5171
Sri Varasiththi Vinaayagar Hindu Temple, 3025 Kennady Rd, Toronto, Ontario




SEP 06
Canada Event Centre
300 Water St, Whitby, ON L1N 9B6
at: 5:30 pm
HIMPRO
Personal Injury and Long-term Disability Commercial & Residential Real Estate & Financing Wills, Estates, Trusts, and Estate Litigation Family Law Employment Law, Franchise Law Civil/Commercial Litigation
Peter Proszanski
Tel: 416-599-8080 ext.222
Email: peter@himprolaw.com
www.himprolaw.com
VENNILA ENTERTAINERS
பெருமையுடன் வழங்கும்
NEW PROMOTERS AUTO CENTRE
DYNEVOR EXPRESS
DOVE SQUARE
SkyRoute TRAVEL SERVICES INC.
THANKS TO
east FM 102.7
DR. SRINIVAS
AKSHAYA
THIVANESH
S P CHARAN
DR. VIJAY PRAKASH
Sa Re Ga Ma Pa
தென்னிந்திய இசைக் கலைஞர்கள் 2025
தொடர்புகளுக்கு: 647-612-4166 | 647-621-7889 | 416-230-3733
flyhela
LIFT TOWING & STORAGE INC
24/7
SOUTHERN AROMA
GLOBAL
DUST LESS
IBC தமிழ்
ஈழநாடு
NEW PROMOTERS AUTO CENTRE

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்!

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 08ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், பொறுப்புக்கூறலின் அவசியமும் தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வின் அவசரமும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இந்த விடயங்களை வலியுறுத்தி, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேக்குக்கு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தனர்.

இதே போன்றே வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகளும் ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கும் இணைத் தலைமை நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்திருந்தனர்.

இந்தக் கடிதங்களில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்திய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கு பதில் கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார்.

இத்தகைய நிலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியானது சில தினங்களுக்கு முன்னர் வோல்கர் டேர்க்குக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றது. அந்தக் கடிதத்தில் பொறுப்புக்கூறல் அவசியம் தொடர்பிலும் இலங்கை தமிழர்களுக்கான இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

வடக்கு, கிழக்கில் விரிவான அதிகாரப் பகிர்வுடன் கூடிய புதிய சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குவதற்கு இலங்கையைத் தொடர்ந்து வற்புறுத்துமாறும், உடனடி நடவடிக்கையாக மாகாண சபைத் தேர்தல்களை எந்தத் தாமதமும் இன்றி நடத்துவதற்குரிய அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறும் அந்தக் கடிதத்தில் தமிழரசுக் கட்சி கோரியுள்ளது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லும் வகையில், ரோம் சாசனத்தில் கையொப்பமிடுவதற்கு அழுத்தம் கொடுக்குமாறும், வடக்கு – கிழக்கின் விரிவான அதிகாரப் பகிர்வுடன் புதிய சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குமாறு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், தமிழரசுக் கட்சியானது தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கை, பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தி போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், சர்வதேச மனித உரிமைகள் சட்ட மீறல்கள் போன்றவற்றை தவிர இனப்படுகொலை, இனப்படுகொலைக்கான நோக்கம் ஆகியவற்றினைக் குறிக்கும் ஆதாரங்களை குறிப்பாக சேகரிக்க வேண்டும். இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தில் இந்த ஆதார சேகரிப்பு முக்கியமான விடயமாகும். இந்தச் செயற்றிட்டத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கடந்த 16 வருடங்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

2011ஆம் ஆண்டு முதல் இந்த விடயம் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுவரை எட்டுக்கும் மேற்பட்ட பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் இன்னமும் நீதியை வழங்குவதற்கான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் உரிய வகையில் முன்னெடுக்கப்படவில்லை.

2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக கொண்டு வரப்பட்ட 30–1 பிரேரணை நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணைக்கு அன்றைய வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர இணை அனுசரணை வழங்கியிருந்தார். இந்தப் பிரேரணையில் சர்வதேச நீதிபதிகள் பங்கேற்கும் ஒரு கலப்பு நீதிமன்றம் மற்றும்



மீள்நிகழாமையை உறுதிப்படுத்தும் ஒரு புதிய அரசியலமைப்பு உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டை வழங்கியிருந்தது. இதனை விட 2022ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையின் படி மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்டுவதற்கான செயற்பாடு ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஆதாரங்களைத் திரட்டும் படிமுறையின் கீழ் இதுவரை 34,000 ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆதாரங்களைச் சேகரிக்கும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடாக உள்ளது. அதனைத்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தனது கடிதத்தில் தற்போது வலியுறுத்தியிருக்கின்றது.

பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் செயற்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தியுள்ள தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், இம்முறை ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரேரணையில் இடம் பெற வேண்டிய விடயங்களையும் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

அதே போன்றே ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இடம்பெற வேண்டிய விடயங்களையும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த நிலையில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வோல்கர் டேர்க் தனது அறிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார். எதிர்வரும் 08ஆம் திகதி வெளியிடவுள்ள தனது அறிக்கையை அரசாங்கத்தின் பதிலை பெறுவதற்காக அனுப்பியிருக்கின்றார்.

அந்த அறிக்கையில் உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கும் நிலையான சமாதானத்துக்கான அடித்தளத்தை இடுவதற்குமான வரலாற்று ரீதியான வாய்ப்பும் சகல சமூக மக்களின் ஆணையும் புதிய அரசாங்கத்துக்கு இருக்கின்றது. இந்தவேளையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் பிரகடனத்துக்கு இணங்குவதனூடாக நிலைமாறுகால நீதிக்கு ஏதுவான சூழலை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்று வோல்கர் டேர்க் தெரிவித்திருக்கின்றார். அத்துடன் ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவால் முன்னெடுக்கப்பட்டு வரும் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையினூடாக 34,000 தரவுகள் மற்றும் ஆதாரங்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

செம்மணி மனித புதைகுழி அகழ்வு தொடர்பிலும் விசாரணைகளின் நியாயத்தன்மையின் அவசியம் குறித்தும் அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னமும் அக்கறையற்ற போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த கொள்கையையே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் பின்பற்றி வருகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது பொறுப்புக்கூறல் விடயத்தில் பொறுப்பாக நடந்து கொள்ளும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். இதனால்தான் கடந்த பாராளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் என்பவற்றில் அந்தக் கட்சிக்கு தமிழ் மக்கள் பேராதரவினை வழங்கியிருந்தனர்.

பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தியே பெரும்பான்மையை உறுப்பினர்களைப் பெற்றிருந்தது.

இறுதி யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றும் இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பினூடாக தீர்வு முன்வைக்கப்படும் என்றும் தேசிய மக்கள் சக்தி உறுதி வழங்கியிருந்தது. ஆனால், புதிய அரசாங்கம் பதவியேற்று ஒரு வருட காலம் நிறைவுக்கு வரவுள்ள நிலையிலும், இன்னமும் பொறுப்புக்கூறல் விடயத்திலோ அல்லது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விவகாரத்திலோ உரிய அக்கறையினை இந்த அரசாங்கம் செலுத்தியிருக்கவில்லை.

கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. உரிமை ஆணைக்குழுவில் 2022 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையை மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்ட போது அதனை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடுமையாக எதிர்த்தது. ஐ.நா. மனித உரிமை பேரவையின் ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறைக்கு எதிராக அரசாங்கம் அறிக்கை வெளியிட்டது.

இதே நிலைப்பாட்டில் தான் தற்போது வரை அரசாங்கம் இருந்து வருகின்றது. இதனால் தான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அரசாங்கத்தை கொண்டு செல்ல வேண்டிய அவசியம் குறித்து வலியுறுத்தப்படுகின்றது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கூட, ரோம் பிரகடனத்தில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தது. எனவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தேசிய மக்கள் அரசாங்கமானது இனியாவது செயற்பட வேண்டும். பொறுப்புக்கூறல் விடயத்திலும் அரசியல் தீர்வு விவகாரத்திலும் அரசாங்கம் பொறுப்புடன் செயற்படவேண்டும்.



# அநுர கச்சதீவு செல்ல விஜய் பேச்சு காரணமா?

எமது கடற்றொழிலாளர்களுக்கு மிக முக்கியமான இடமாக கச்சத்தீவு காணப்படுகின்றது. இந்த கச்சத் தீவை கேந்திரப்படுத்தி இன்று பாரிய கலந்துரையாடலொன்று எழுந்துள் ளது. இந்த கடல் எமது மக்களுக் கானது. எமது தீவுகள் எமது மக்களுக்கானது. எமது நிலப்பரப்பு எமது மக்களுக்கானது. எமது வானம் எமது மக்களுக்கானது. எந்தவொரு அழுத்தங்களுக்கும் அடிப்பணிய மாட்டோம் என சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன் என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவிக்கின்றார்.

யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தில் ஈடு பட்ட ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க, மயிலிட்டி மீனவத் துறை முகத்தின் அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கடந்த முதலாம் தேதி கலந்து கொண்டார். இந்த நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற் றிய போதே ஜனாதிபதி கச்ச தீவு தொடர்பில் கருத்து வெளியிட்டி ருந்தார்.

கச்சத்தீவு பற்றி தவெக மாநாட்டில் அதன் தலைவர் விஜயின் பேச்சு இலங்கையில் சலசலப்பை ஏற்படுத்தி யது. சமூக வலைதளங்களில் சிங்க ளம் மற்றும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் மட்டுமின்றி இலங்கை அரசியல் மட்டத்திலும் அது விவாதிக்கப்பட, வரலாற்றில் முதன் முறையாக இலங்கை ஜனாதிபதி ஒருவர் கச்சத்தீவுக்கு விஜயம் செய்த நிகழ்வும் அரங்கேறியது.

### கச்சதீவு குறித்து விஜய் பேசியது என்ன?

எம்ம தமிழ்நாட்டு மீனவர்கள் கிட்டத்தட்ட 800 பேருக்கு மேல இலங்கை கடற்படையினரால் தாக்க ப்பட்டிருக் கின்றார்கள். அதை கண்டிக்க எதையும் செய்ய சொல்ல வில்லை. சின்னதா ஒன்னே ஒன்று மட்டும் செய்து கொடுங்க. இனி மேலாவது எங்களுடைய மீனவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக இந்த கச்சத்தீவை இலங்கை கிட்ட இரு ந்து மீட்டு கொடுத்துருங்க. அது போதும். என தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித் திருந்தார்.

கச்சத்தீவு தொடர்பில் தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் வெளியிட்ட கருத்து இலங்கை மக்கள் மத்தியில் பல்வேறு கருத் தாடல்களை ஏற்படுத்தியிருந்தது.

தமிழர்கள் மாத்திரமன்றி, சிங்களவர் கள் மத்தியிலும் பிரபலமான விஜய், இவ்வாறு கருத்து வெளியிட்டமை இலங்கையில் பலத்த விவாதத்தை தோற்றுவித்திருந்தது.

இந்த நிலையில் விஜயின் கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்கள், வெளி விவகார அமைச்சர் விஜித்த ஹேரத்திடம், கேள்வி எழுப்பியிருந்த னர். இலங்கை வசம் உள்ள கச்சத் தீவை இந்தியாவுக்கு ஒரு போதும் வழங்க முடியாது என வெளிவிகார அமைச்சர் விஜித்த ஹேரத் கடந்த மாதம் 27-ஆம் தேதி தெரிவித்திரு ந்தார்.

கச்சத்தீவு என்பது இலங்கைக்கு சொந்தமான ஒரு தீவு. அது எந்த விதத்திலும் மாறாது. தென் இந்தியா வில் தேர்தல் காலம் என்பதனால் வாக்குகளை பெறுவதற்காக ஒவ் வொரு கருத்துகளை கூறுவார்கள். இது முதலாவது சந்தர்ப்பம் இல்லை. இதுக்கு முன்னரும் தேர்தல் மேடைகளில் இவ்வாறு கூறி இருந்தார்கள். இந்த தேர்தல் மேடைகளில் கூறுவது நிறை



வேறாது. தேர்தல் மேடையில் விஜய் கூறியதை நானும் பார்த்தேன். அதை பெரிதுபடுத்த தேவை இல்லை. மத்திய அரசாங்கம் அல்லது இராஜ தந்திர ரீதியில் இவ்வாறு ஒன்றும் நடக்கவில்லை. அன்றும் இன்றும் என்றும் கச்சத்தீவு இலங்கை வசமே காணப்படும் என இலங்கை வெளி விகார அமைச்சர் விஜித்த ஹேரத் குறிப்பிட்டார்.

### கச்சதீவுக்குச் சென்ற அநுர

இதன் பின்னணியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் அது தொடர்பில் இந்த கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தை வெளியிட்டிருந்தார். கச்சத்தீவு குறித்து கருத்து வெளி யிட்டது மாத்திரமன்றி, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கச்சத் தீவுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

கச்சத்தீவுக்கு அரசத் தலைவர் ஒருவர் விஜயம் மேற்கொண்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற் கொண்ட ஜனாதிபதி அங்கிருந்து கடற்படைக்கு சொந்தமான படகில் கச்சத்தீவுக்கு சென்று கச்சத்தீவு தொடர்பில் ஆராய்ந்திருந்தார்.

### அநுர சொல்ல வருவது என்ன?

கச்சத்தீவு விஜயத்தின் ஊடாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாய க்க என்ன சொல்ல வருகின்றார் என்பது தொடர்பில் மூத்த பத்திரி கையாளர் ஆர்.சிவராஜாவிடம், பிபிசி தமிழ் வினவியது.

கச்சத்தீவு தொடர்பில் இந்திய அரசி யல்வாதிகள் அல்லது தமிழக அரசியல்வாதிகள் என்ன தான் சொன் னாலும், அவர்களின் கோரிக்கை எந்த வகையிலும் நிறைவேற்றப்பட மாட்டாது என்பதை தான் அவர் நேரடியாகவே சொல்ல வருகின்றார். தானே அந்த இடத்திற்கு சென்று தானே விஜயம் செய்து, அது இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி என்பதை அவர் நிரூ பிக்க முயல்கின்றார். அங்கு சென்ற மையின் ஊடாக பாதுகாப்பு உறுதி ப்படுத்தலையும், கச்சத்தீவு எங்களு க்கு தான் சொந்தம் என்பதையும், அது எங்களின் கட்டுப் பாட்டில் தான் இருக்கின்றது என்பதையும் நாங்கள் நினைத்த நேரம் செல்ல லாம் என்ற கருத்தையும் கூறும் வகையிலேயே அவர் அங்கு சென் றார். என மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவராஜா தெரிவிக்கின்றார்.

`மீனவப் பிரச்னைக்கு கச்சத்தீவை மீள பெற்று விட்டால் தீர்வு வரும் என்று தமிழகத்திலுள்ள அனைத்து அரசியல்வாதிகளும் நினைக்கின்றார் கள். ஆனால், அதை இவர் விட்டுக் கொடுக்க மாட்டார். தானே அதை கையாளுகின்றேன் என்ற செய்தியை சொல்கின்றார். அரசாங்கம் அமைதி யாக இருக்கின்றது என்று நினைக் கின்றார்கள். அரசாங்கம் அமைதி யாக இல்லை. அரசாங்கம் நேரடி யாகவே இதை கண்காணித்து கொண்டிருக்கின்றது என்ற செய்தியை தான் இவர் சொல்கின் றார் எனவும் அவர் கூறுகின்றார்.

### விஜயின் பேச்சு எவ்வாறு தாக்கம்?

தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய், கச்சத்தீவு தொடர்பில் வெளி யிட்ட கருத்து இலங்கை அரசிய லில் எவ்வாறான தாக்கத்தை செலு த்தியுள்ளது என்பது குறித்தும் மூத்த பத்திரிகையாளர் ஆர்.சிவ ராஜா, பிபிசி தமிழுக்கு தெளிவுட்டி னார்.

ஸ்டாலினை பொறுத்தவரையில் அவர் அடிக்கடி கச்சத்தீவு தொடர் பில் கருத்து வெளியிட்டு வரு கின்றார். அதே போன்று தான் எடப்பாடி பழனிசாமியும் கருத்து வெளியிடுகின்றார். ஆனால் விஜயை பொறுத்தவரையில் அவர் கூறிய கருத்து இளைஞர்கள் மத்தியில் சிந்தனையை தூண்டியுள்ளதாக இலங்கை அரசாங்கம் கருதுகின்



றது. விஜய்க்கு இந்தியாவில் எவ்வ ளவு ஆதரவு இருக்கின்றதோ? அதேபோன்று இலங்கையின் தமிழ், சிங்கள இளைஞர் கள் மத்தியிலும் பெருமளவான ஆதரவு இருக்கின் றது. ஆகவே, விஜயின் அந்த கருத்து வலுவாக எடுபடும் என அரசாங்கம் நம்புகின்றது. இந்த பிரச்சனைக்கு விரைவாக முற்றுப் புள்ளி வைக்கலாம் என இலங்கை அரசாங்கம் எண்ணியுள்ளது.`` என வும் அவர் குறிப்பிட்டார்.

### இலங்கை அரசு என்ன சொல்கின்றது?

கச்சத்தீவு பகுதியில் மீன்பிடி நட வடிக்கைகளில் ஈடுபடும் இலங்கை மீனவர் களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்த விஜயம் அமைந்திருந்ததாக கடற் றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்து ள்ளதாக அவரது ஊடக செயலாளர் க.கிரு ஷாந்தன் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீனவர் களின் பாதுகாப்பு, அவர்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் மற்றும் அந்த பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாட்டு திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆராய்ந்து ள்ள தாகவும் அவர் கூறுகின்றார்.

கச்சத்தீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய பகுதிகளை ஒன்றிணைத்து சுற் றுலா திட்டமொன்றை மேற்கொள் வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர் பிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன் போது ஆராய்ந் துள்ளார். நன்றி:- பிபிசி



# அநுர பின்வாங்க முடியாத இடத்துக்கு வந்து விட்டாரா?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



ரணில் வெளியில் வந்துவிட்டார். வைத்தியசாலையில் இருந்து வெளி வரும் போது கையில் அவர் வைத்தி ருந்த புத்தகம் தற்செயலானதா? அல்லது அவருடைய வழமையான பாணியா? அது முன்னாள் பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜெல்சின் எழுதிய Unleashed - கட்டவிழ்த்து விடுதல் என்ற புத்தகம். அதன் மூலம் ரணில் அரசாங்கத்துக்கு ஏதாவது சொல்ல நினைக்கிறாரா? அன்ரன் பாலசிங்கம் அவரை நரி என்று அழைத்தார். பாலசிங்கம் சொன்ன பல விடயங்களை தமிழர்கள் மறந்து விட் டார்கள். ஆனால் ரணிலைப்பற்றி அவர் சொன்னதை மறக்காமல் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

ரணிலைக் கைது செய்த விடயத்தில் தேசிய மக்கள் சக்தியானது பின்வாங்க முடியாத ஒரு இடத்துக்கு வந்திரு க்கிறது என்று சட்டத்தரணி சாலிய பீரிஸ் கூறுகிறார்.அ வர் ஆங்கிலத்தில் "Crossing the Rubicon" என்ற சொற் றொடரைப் பாவித்துள்ளார். அது ஜீலியஸ் சீசரின் துணிகரமான. ஆனால் பின்வாங்க முடியாத ஒரு யுத்த நகர் வைக் குறிக்கும் சொற்றொடர். பின் வாங்க முடியாத ஓர் இடத்துக்கு என்பிபி முன்நகர்ந்திருக்கிறது என்று பொருள்.

தொடர்ச்சியாக நிகழும் கைது நடவடி க்கைகளைத் தொகுத்துப் பார்த்தல் என்பிபி அதை நன்கு விளங்கி வைத்தி ருக்கிறது என்றே தெரிகிறது. தமிழ்த் தேசிய அரசியல் நோக்குநிலையில் இருந்து தேசிய மக்கள் சக்தி மீது விமர்சனங்கள் ஆயிரம் உண்டு.ஆனால் சிங்கள மக்களைப் பொறுத்தவரையிலும் அது சில மாற்றங்களைக் காட்டுகிறது என்பதைத் தமிழர்கள் ஏற்றுக் கொண்டு தானாக வேண்டும்.

குறிப்பாக ஊழலுக்கு எதிரான நடவடி க்கைகளைப் பொறுத்தவரை இதுவரை 70க்கும் குறையாதவர்கள் கைது செய்யப்பட்டு விட்டார்கள். இவர்களில் அரசியல்வாதிகள்.உயர் நிர்வாகிகள். போலீஸ் அதிகாரிகள் படைப்பிரதானிகள். அரசியல் வாதிகளின் கைக்கூலிகளாக பாதாள உலகக் குற்றவாளிகள் போன்ற வர்கள் அடங்குவர்.

ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்த பின் அதிலிருந்து பின் வாங்கினால், இப்பொழுது சீண்டப்பட்டிருக்கும். தற்காப்பு நிலைக்குத் - defensive - தள்ளப்பட்டிருக்கும் சிங்கள மேட்டுக் குடியும் எதிர்க் கட்சிகளும் பழி வாங்கும் உணர்ச்சியோடு அனுர மீது பாயும்.அ

தாவது தாக்கும் நிலைக்கு - offensive - வளரக்கூடும். எனவே என்பிபி திரும்பிப் போக முடியாது. அப்படிப் போனால் அது எல்லாவிதத்திலும் தோல்வி.அ தனால் ரணிலைத் தொடர்ந்து அடுத் தடுத்து பெரிய தலைகளைக் கைது செய்வதன்மூலம் சிங்கள பௌத்த மேட்டுக்குடியை ஒருவித அச்சச் சூழலில், தற்காப்பு நிலையில் வைத்திரு க்கலாம்.

ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதோடு சிங்கள பௌத்த உயர் குழாம் ஒன்று திரண்டு விட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் பின்வருமாறு கூறினார்..."கட்சி பேதமின்றி நாம் ஒன்றிணைய வேண்டும். இவை அனை த்தும் இணைந்து இறுதியில் எமது வீட்டுக் கதவைத் தட்டும்.நாம் தற் பொழுது ஒன்றிணைந்து எதிர்கொள்ள வில்லை என்றால் எதிர்காலத்தில் ஆபத் தான சூழ்நிலையை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்

இது சிங்கள பௌத்த உயர் குழாத்தின் அச்சத்தை பிரதிபலிக்கும் கருத்தாகும்.

ரணிலைக் கைது செய்வதன்மூலம் சிங்கள பௌத்த உயர் குழாமும் எதிர்க்கட்சிகளும் உஷார் ஆகிவிட்டன. இந்த அரசாங்கம் இப்படியே தொடர்ந்து முன் சென்றால் தங்கள் எல்லாரிலும் கைவைக்கக்கூடும் என்ற அச்சம் அவர் களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் எதிர்க்கட்சிகள் மீண்டும் ஒன்று திரளும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

இது ஒரு ஒத்திகை தான். இப்போ துள்ள சிங்கள பௌத்த உயர் குழாத்தில் ஒப்பீட்டளவில் மென் இலக்காக ரணில் தான் காணப்படுகிறார். அவருடைய தாய்க் கட்சி உடைந்து விட்டது. அவர் ஒரு பலமான அணியாக இல்லை. உள்நாட்டில் அவர் அனேகமாக பலவீன



மான ஒரு தலைவர் தான். அவர் தண்டு சமத்தாக மிடுக்காக நிமிர்ந்து காட்சி தருபவர் அல்ல. தன்னை ஜனவசியம் மிக்க ஒரு தலைவராகக் கட்டி எழுப்ப வேண்டும் என்பதற்காக சிங்கள பௌத்த இனவாதத்தின் தீவிர நிலைகளுக்கு தலைமை தாங்குபவர் அல்ல.அல்லது சிங்கள பௌத்த கூட்டு உளவியலைக் கவரும் விதத்தில் ஆடை அணிகலன் கள் போன்றவற்றில் கவனம் செலுத்து பவர் அல்ல. மாறாக அவர் தன் அரசியல் வாழ்க்கை முழுவதிலும் மேற்கத்திய உடுப்புகளோடு தான் காணப்பட்டார். மேற்கத்திய அறிவுவாதத்தின் வாரிசாக வும் தன்னை காட்டிக்கொள்ள முற்பட் டார். ராஜபக்சக்களை போலன்றி ஏன் அனுரவை போலன்றி எல்லா பேரசு களையும் சமதூரத்தில் வைத்திருக்கக் கூடிய தந்திரசாலியாகவும் கெட்டிக் காரராகவும் அவர் காணப்பட்டார்.

ஆனால் அவருடைய கெட்டித்தனங்கள் சிங்கள மக்களைக் கவரவில்லை. சிங்கள மக்களைக் கவர்வதற்கு ராஜபக்சக் களிடம் நிறைய இருந்தது. ரணிலிடம் குறைவாகவே இருந்தது. அதனால் தான் அவர் அநேகமாக தேர்தல்களில் தோற்கடிக்கப்படும் ஒரு தலைவராக காணப்பட்டார். எனினும் உள்நாட்டில் அவர் பலவீனமாக தலைவராக இருந்த பொழுதும்.அனைத்துலக அளவில் அவர் ஒரு பலமான ஒரு பிம்பத்தை கட்டியெழுப்பி வைத்திருந்தார். மேற் கத்திய தலைநகரங்களிலும் சரி ஐநா. ஐஎம்எ.ப் போன்ற உலகப்பொது நிறுவ னங்களிலும் சரி அவருக்கு கவர்ச்சி அதிகம்.

இவ்வாறு உள்நாட்டில் கவர்ச்சி குறை ந்த ஒருவரை ஒரு மென் இலக்கை முதலில் கைது செய்ததன்மூலம் அனுர ஒத்திகை ஒன்றைச் செய்தார் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.இது எதிர்காலத் தில் நிகழப்போகும் கைது நடவடிக்கை களுக்கான ஒத்திகை. அதேசமயம். ஏற்கனவே இளைய ராஜபக்சவாகிய சஜீந்திர ராஜபக்ச கைது செய்யப்பட்டிரு க்கிறார். நேற்று அவருடைய விளக்க மறியல் நீடிக்கப்பட்டிருக்கிறது. மூத்த ராஜபக்சங்களில் கையை வைத்தால் எதிர்ப்பு பலமாக இருக்கலாம் என்று தேசிய மக்கள் சக்தி சிந்திக்கின்றது. மூத்த ராஜபக்ஷக்களில் கைவைத்தால் அது இனவாதத்தை மேலும் முன்னிலை க்கு கொண்டு வரும்.யுத்த வெற்றி வாதம் மீண்டும் பலமடையக்கூடும். அதனால் தான் பரீட்ச்சார்த்தமாக சஷீந்திரவில்ரணிலில் கை வைத்திருக கிறார்கள்.

அது இன்னொரு வகையில் பழைய பகையை. கணக்கைத் தீர்ப்பது. அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த அமைச்சர் பிமல் ரட்டநாயக்க கூறினார் ரணிலை 40 ஆண்டுகளுக்கு முன்னரே கைது செய்து இருந்திருக்க வேண்டும் என்று.அது 40ஆண்டுகளுக்கு முந்திய ஜேவிபியின் கணக்கு.ஜேவிபியின் இரண் டாவது போராட்டத்தை கொடூரமாக நசுக்கியது யுஎன்பி.அப்பொழுது ரணில் அரசாங்கத்தில் ஒரு பிரதானி.எனவே அந்தக் கணக்கைத் தீர்க்க வேண்டிய தேவை ஜேவிபிக்கு இருந்தது. ஆனால் இந்த இடத்தில் மேலும் ஒன்றைச் சுட்டிக் காட்ட வேண்டும். ஜேவிபிக்கு எதிராக இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் குற்றங்களுக்காக அவர் கைது செய்யப்படவில்லை. அது ஒரு குற்றச்



சாட்டாகவே இல்லை.பிமல் ரட்டநாயக்க யாழ்ப்பாணத்தில் வைத்துச் சுட்டிக் காட்டிய. தமிழ் மக்களுக்கு எதிரான நூலக எரிப்பு போன்ற குற்றங்களுக்காக வும் அவர் கைது செய்யப்படவில்லை. அரச வளங்களை தனிப்பட்ட தேவை களுக்கு பயன்படுத்தியதற்காகத் தான் அவர் மீது வழக்கு. போர்க்குற்ற வழக்கு அல்ல.

அவரைக் கைது செய்வதன் மூலம் எதிர்காலத்தில் அவரைப் போன்ற முன்னாள் ஜனாதிபதிகளும் உட்பட ஏனையவர்களைக் கைது செய்வதற் கான ஒரு பரிசோதனையை என்பிபி செய்து பார்த்தது என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அந்த பரிசோத னைக்குள் இதுவரை போர்க் குற்றங்கள் அடங்கவில்லை. உள்நாட்டில் ரணில் தேர்தல் கவர்ச்சி குறைந்த தலைவராக இருந்த காரணத்தால் அவரை ஒரு மென் இலக்கு என்று தீர்மானித்து கைது செய்திருக்கலாம். ஆனால் இப் பொழுது எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு விட்டன. சிங்கள பௌத்த உயர் குழாம் மீண்டும் ஒன்று திரளுகிறது.''தேசிய மக்கள் சக்தியை வீட்டுக்கு அனுப்புவ தற்கான பலமான கூட்டணியை உரு வாக்குவதற்கு அரசாங்கமே அடிக்கல் நாட்டியிருக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார கூறியுள்ளார்.

சாலிய பீரிஸ் கூறியது போல திரும்பி வர முடியாத ஒரு இடத்துக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வந்திருக்கின் றது. எனவே அவர்கள் தொடர்ந்தும் துணிச்சலாக ரிஸ்க் எடுத்து ஊழலுக்கு எதிராக முன்போனால் மட்டும்தான் தமையும் காத்துக் கொள்ளலாம் எதிர்த்தரப்பையும் பலவீனப்படுத்தலாம். அதேசமயம் இந்தக் கைது நடவடி க்கையால் தமிழ் தரப்புக்கு ஏற்பட்டிரு க்கும் சாதக பாதக விளைவுகள் என்ன?

ரணில் கைது செய்யப்பட்ட காலம் எதுவென்று பார்க்க வேண்டும்.அடுத்த ஜெனிவா கூட்டத்துடருக்கு சில கிழமைகளுக்கு முன் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.ஒரு முன்னாள் ஜனாதிபதியைக் கைது செய்யும் அளவுக்கு இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதி பலமாக உள்ளது என்று அனைத் துலக அரங்கில் எடுத்துக் கூறுவதற்கு அது அனுரவுக்கு உதவும்.

ரணில் மேற்கு நாடுகளுக்கும் ஐநாவுக் கும் இலங்கைத் தீவில் மேற்கு நாடு களின் அனுசரணையோடு முன்னெடு க்கப்பட்ட இரண்டு சமாதான முயற்சி களில் அவர் தான் அரச பங்காளி. முதலாவது சமாதான முயற்சி நோர்வே யின் அனுசரணையோடு கூடிய சமாதான முயற்சிகள். இரண்டாவது சமாதான முயற்சி.2015ஆம் ஆண்டு ஐநா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற் றப்பட்ட பொறுப்புக் கூறலுக்கான தீர்மானம்.இந்த இரண்டிலும் ரணில் தான் சிங்கள மக்களை பிரதிநிதித்து வப்படுத்தினார். அவருடைய காலத்தில் தான் மேற்கின் நிகழ்ச்சி நிரலுக்கு இசை வாக சமாதான முயற்சிகள் அல்லது நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்க ப்பட்டிருக்கின்றன. எனவே மேற்கு நாடுகளுக்கும் ஐநாவுக்கும் ஐ.எம் எப்பிற்கும் வாலாயமான ஒரு தலை வரை (22ம்பக்கம் பார்க்க)

# இனி மேல் யுத்தம் ஒன்று வராது! எனவே இராணுவத்தின் பயன்பாட்டிலுள்ள காணிகள் - வீதிகள் விடுவிக்கப்படும்! மயிலிட்டியில் அநுர உரை!



யுத்தத்தின் போது இராணுவத்தின் பயன்பாட்டிற்காக கையகப்படுத்தப் பட்ட, விடுவிக்கக்கூடிய அனைத்து காணிகளையும் வீதிகளையும் மக்க ளின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப் படும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் 01 செப் 2025 திங்கட்கிழமை ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

பிரிக்கப்பட்டிருந்த எம்மை ஒன்றி ணைக்க தேர்தல் தேவையாக இருந் தது எமக்கு முன்பாக வைக்கப் பட்டுள்ள எதிர்பார்க்கப்பட்ட இந்த ஒன்றிணைவை மேலும் வலுப்படுத்த வேண்டிய தேவையுள்ளது எதிர்காலத் தில் எமது பிள்ளைகள் பிரிந்திருக்க முடியாத நாட்டை உருவாக்க வேண்டும். வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்ற பேதமின்றி நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து மக்க ளின் பிரச்சினைகளுக்கு தீர்வு. காண்ப தற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதில் விசேடமாக வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் பொரு ளாதார நெருக்கடிக்கு நாம் கவனம் செலுத்தியுள்ளோம் விவசாயத்தை அடிப்படையாக கொண்ட மக்கள் இருக்கின்றார்கள் அதற்கான நிலத்தை மக்களுக்கு வழங்கவேண்டிய தேவை யுள்ளது.

யுத்தத்தினால் பாரிய இராணுவ முகாம் கள் இராணுவத்தினரால் அமைக்கப் பட்டிருந்த்து. இனி ஒருபோதும் யுத்த ஆபத்து இல்லை இனி யுத்தம் நடை பெறும் என்று இந்த காணிகளை நாம் வைத்திருக்கவில்லை. எமது அரசாங் கம் யுத்தம் இனி மேல் நடக்காது இருப்பதற்காகவே வேலைகளை செய்துவருகின்றது சில அரசாங்கங்கள் யுத்தம் நடைபெற்றாலும் என நினை த்து காணிகளை வைத்திருந்த்து எனவே நாம் மக்களின் காணிகளையும் வீதிகளை மக்களின் பயன்பாட்டிற்கு விரைவாக வழங்குவோம்.

அடுத்து வடக்கு மக்களின் பிரதான வேவையாக மீனவ சமூகத்திற்கான தேவையான வசதிகளை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு.

வடக்கில் மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் மீனவ சமூகத்திற்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அவர்களின் பிரச்சினைகளு க்கு தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த திட்டத்தினால் வட மாகாணத் தில் உள்ள மீனவ சமூகம் மாத்திர மன்றி, கிழக்கு மற்றும் தெற்கு மாகா ணங்களில் இருந்து வரும் மீன்பிடி படகுகளுக்கும் நீர், மின்சாரம், எரி பொருள் போன்ற அத்தியாவசிய வசதி கள், குளிர்சாதன சேமிப்பு வசதிகள், வலை தயாரிப்பு நிலைய வசதிகள், ஏலவிற்பனை மண்டப வசதிகள் மற்றும் தொடர்பாடல் பரிமாற்ற மைய வசதிகள் என்பனவும் வழங்க திட்ட மிடப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு அரசாங்கம் 298 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது.

கடந்த கால அரசாங்கங்கள் போரை எதிர்பார்த்து பணியாற்றிய போதிலும், இந்த நாட்டில் மீண்டும் எந்த



விதமான யுத்தமும் ஏற்படாத வகை யில் நாட்டில் அமைதியையும் நல்லி ணக்கத்தையும் கட்டியெழுப்ப நாங்கள் செயற்பட்டுவருகின்றோம்.

நாட்டைச் சுற்றியுள்ள கடல், தீவுகள் மற்றும் காணிகளை மக்களுக்காகப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அதில் எந்த விதமான அழுத்தத்திற்கும் இடமளிக்கப்படாது

நமது நாட்டை புதிதாகக் கட்டியெழு ப்ப வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். இந்த வடமாகாணத்திற்கு எம்மிடம் பாரிய அபிவிருத்தி திட்டம் உள்ளது. கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களில், வடக்கின் மக்கள் முதல் முறையாக அரசாங்கத்தை அமைக்க வாக்களித் தனர். பிளவுபட்டு, ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை கொண்டிருந்த ஒரு நாடு, அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்தது. இப்போது நாம் செய்ய வேண்டியது, இந்த ஒன்றிணைவு வீழ்ச்சியடைய இடமளிக்காமல், அதை வலுப்படுத்தி, எதிர்கால சந்ததியின ருக்கு ஒற்றுமை மற்றும் சகோதரத் துவம் நிறைந்த நாட்டைக் கட்டி யெழுப்ப வேண்டும்.

தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாத த்தை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றன என்பதை நாம் அறிவோம். இன்று வடக்கு மற்றும் தெற்கிலும் இதே நிலை காணப்படு கிறது. வடக்கிலோ அல்லது தெற் கிலோ மேற்கொள்ளப்படும் இந்த இன வாத அரசியல் மக்களுக்காக அன்றி அரசியல்வாதிகளுக்காகவே மேற் கொள்ளப்படுகிறது என்பதை மறந்து விடக் கூடாது. எனவே, வடக்கு மற் றும் தெற்கில் உள்ள நாம் அனை வரும் இந்த இனவாத அரசியலை நிராகரிக்க வேண்டும். இனவாதம் மீண்டும் எங்கும் தலை தூக்க அனு மதிக்கக்கூடாது.

இதற்காக நாங்கள் மிகவும் கடினமாக உழைத்து வருறோம். அரசாங்கமென்ற வகையிலும் தனிப்பட்ட ரீதியிலும் நாட்டில் மீண்டும் ஒரு போர் வராது என்று நாங்கள் நம்புகிறோம். யுத்தம் ஒன்று வரும் என்ற சிந்தித்து சிலர் செயற்பட்டார்கள் . மீண்டும் ஒரு போர் நடக்காமல் தடுக்க நாங்கள் உழைத்து வருகிறோம். மக்களுக்கு முடிந்தவரை காணிகளை வழங்க வேண்டும். மூடப் பட்ட வீதிகளைத் திறக்க வேண்டும்.

நாம் ஒருவரையொருவர் சந்தேகிக்கக் கூடாது. மற்றொரு போரைத் தடுக்க நாம் அனைவரும் பாடுபடுவோம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அந்த மனநிலையுடன் நம் நாட்டைப் பார்க்க வேண்டும். நமது நாட்டை ஒரு புதிய சமூகத்தை நோக்கி இட்டுச் செல்ல வேண்டும். பழைய தோல்வி யுற்ற அரசியல் இயக்கங்கள், மதவாதம் மற்றும் சாதிவாதம் என்பவற்றைப் பயன்படுத்தப்படுகின்றன. அவை ஒரு நூற்றாண்டுக்கும் முந்திய காலத்திற் குரியவை. இன்று, இனம், மதம், சாதி அல்ல, மனிதநேயம் தான் பிரதான காரணி. எனவே, அனைத்து பிளவு. களும் மனிதநேயத்திற்கு அடிபணிய வேண்டும். மனிதநேயத்தை அனைத் தையும் விட உயர்வாக கருதும் ஒரு நாட்டை நாம் கட்டியெழுப்ப வேண்டும். அதுதான் நம் நாட்டின் மற்றும் உலகின் எதிர்காலமாகும்.

மண்ணைத் தோண்டும் போது பழைய எலும்புக்கூடுகள் வெளிப்படு கின்றன என்பதை நான் அறிவேன். இப்போது, செம்மணி பகுதியில் உள்ள புதைகுழிகள் குறித்து மிகவும் வெளிப்படையான விசாரணையை நடத்தி வருகிறோம், இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது போன்ற புதைகுழிகள் மீண்டும் உரு வாகாத நாட்டை உருவாக்குவதே எங்கள் எதிர்பார்ப்பாகும்.

தற்சமயம், நம் நாட்டிற்கு அவசியமான வற்றை நாம் செய்து வருகிறோம். நமது மதத் தலைவர்கள், அரசியல் அதிகாரம், அரச அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பிரதிநிதிகள், நாம் அனை வரும் ஒரே குறிக்கோளுடன் செயல்படு வோம். அரசியல் அதிகாரம் என்ற வகையில் நம் தரப்பில் இருந்து நம் மால் முடிந்த அனைத்தையும் செய் வோம். இந்த நாட்டை நாம் அனை வரும் ஒன்றாகக் கட்டியெழுப்புவோம் என்றார்.



# அநுர:- எதைக் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றார்?

ரணில் ஒரு வலிய சீவன் என்று பல ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். ஓர் அமீபாவைப் போல எல்லா நெருக்கடிகளுக்குள்ளும் தன்னை சுதாகரித்துக் கொண்டு சுழித்துக் கொண்டு வளைந்து நெளிந்து விட்டுக் கொடுத்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும் வல்லமை அவருக்கு உண்டு என்ற பொருளில் அவ்வாறு கூறியிருந்தேன்.

ஆனால் அண்மையில் நீதிமன்றத்தில் அவருடைய வழக்கறிஞர்கள் அவரைப் பிணை எடுப்பதற்காக சுட்டிக் காட்டிய நோய்களின் அடிப்படையில் சிந்தித்தால், அவர் எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடுவாரா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவருடைய சட்டத்தரணிகள் தெரிவித்திருக்கும் அத்தனை நோய்களும் அவரைப் பாதிக்குமாக இருந்தால் அவர் ஓர் ஆரோக்கியமான ஆளாக இருக்க முடியாது. இதை அமைச்சர் லால் கந்த சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தடுப்புக் காவல் நாட்களில் அவருக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் கூறிய சர்ச்சைக்குரிய கருத்துக்களின்படி கைது செய்யப்பட்டதன் மூலம் ரணிலுக்கு இருந்த நோய்கள் வெளித் தெரிய வந்தன என்றும் அதன் மூலம் அவர் அந்த நோய்களிலிருந்து தன்னை தற்காத்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்றும் எடுத்துக் கொண்டால் அந்த மருத்துவர் கூறுவது போல கைது செய்யப்பட்டதால் அவருக்கு நன்மை கிடைத்திருக்கிறதா?

வைத்தியசாலையில் இருந்து வெளியேறும் போது அவர் கையில் வைத்திருந்த புத்தகம் போரிஸ் ஜெல்சின் எழுதியது. Unleashed-கட்டவிழ்த்து விடப்படுதல் என்பது அதன் பெயர். அனுர எதைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்? அந்த மருத்துவர் கூறுவது போல நோய்கள் நீங்கப் பெற்று ரணில் புத்திளமையோடு மீண்டும் அரசியலுக்கு வருவாரா? அல்லது லால் கந்த கூறுவது போல ரணில் ஒரு நோயாளியாக அரசியலில் இருந்து ஒதுங்குவாரா?

அவர் ஒரு வலிய சீவன். இப்பொழுது சீண்டப்பட்டிருக்கிறார். காயப்பட்ட பாம்பு. எனவே பழிவாங்கும் உணர்ச்சி அதிகமாக இருக்கும். அதனால் எதிர்காலத்தில் இயலாத வயதிலும் அவர் அரசியலில் ஈடுபடக் கூடிய வாய்ப்புகள் இருக்கலாம். அல்லது அவமானத்தோடும் தோல்வியோடும் அவப் பெயரோடும் அவர் அரசியலில் இருந்து ஒதுங்க நேரிடலாம். அவரைப் போலவே தந்திரமும் சூழ்ச்சிகளும் நிறைந்த அவருடைய மாமன் ஜெயவர்த்தன இறந்த பொழுது அவருக்காக நாடு பெரிய அளவில் துக்கம் அனுஷ்டிக்கவில்லை என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட வேண்டும்.

நவீன சிங்கள பௌத்த அரசியலில் ரணில் ஒரு வித்தியாசமான தலைவர். அவர் என்றைக்குமே சிங்கள பௌத்த ஆடைகளோடு காணப்பட்டதில்லை. மேற்கத்திய ஆடைகளோடு தான் காணப்பட்டார். அவர் என்றைக்குமே சிங்கள பௌத்த தீவிரவாதத்திற்கு தலைமை தாங்க முற்பட்டதில்லை. லிபரல் முகமூடி அணிந்த ஒரு இனவாதியாகவே என்றென்றும் இருந்தார். அவருடைய லிபரல் முகமூடி தற்செயலானது அல்ல. அவருடைய மேற்கத்தியப் பாரம்பரியத்தினடியாகக் கிடைத்தது. அவர் மேற்கத்திய நாடுகளுக்கு அதிகம் இசைவான ஒரு தலைவர். எனவே அவர் அந்த முகமூடியை அணிந்தால் தான் தனது வாக்காளர்களுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே ஒரு சமநிலையைப் பேணலாம்.

இலங்கைத் தீவில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் என்று பார்த்தால் முக்கியமான மூன்று முயற்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலங்களில்தான் முன்னெடுக்கப்பட்டன. முதலாவது இந்திய-இலங்கை உடன்படிக்கை. இரண்டாவது ரணில்-பிரபாகரன் உடன்படிக்கை. மூன்றாவது நிலைமாறு கால நீதியின் கீழான முன்னெடுப்புகள்.



இந்த மூன்றில் இரண்டு முயற்சிகளில் ரணில்தான் சிங்கள பௌத்த அரசியலை பிரதிநிதித்துவப்படுத்தியவர். எனவே தொகுத்துப் பார்த்தால் இலங்கைத் தீவில் சமாதான முயற்சிகளில் அதிகமாக ஈடுபட்ட ஒரு சிங்களத் தலைவராக அவரைக் கருத முடியுமா?

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆலோசகராக இருந்த அன்ரன் பாலசிங்கம் ரணிலை ஒரு நரி என்று அழைத்திருந்தார். தனது மாமனைப் போலவே ரணிலும் ஒரு தந்திரசாலி தான். ஆனால் அவருடைய மாமன் அளவுக்கு அரசியலில் அவர் அதிர்ஷ்டசாலி அல்ல. அவருடைய கெட்டித்தனங்களையும் தந்திரங்களையும் சிங்கள மக்கள் அங்கீகரிக்கவில்லை. சிங்கள மக்கள் அவரைப் போன்ற மேற்கத்திய பாரம்பரியத்தின் பிரதிநிதியாக தோன்றுகின்ற ஆனால் முகமூடி அணிந்த ஓர் இனவாதியை விடவும் வெளிப்படையாக தெரியும் இனவாதிகளைத்தான் அங்கீகரித்தார்கள் ஆட்சிக்கு கொண்டு வந்தார்கள். இதனால் ரணில் விக்கிரமசிங்க சிங்கள பௌத்த அரசியலில் அதிர்ஷ்டம் அதிர்ஷ்டமில்லாத ஒரு தலைவர் தான். விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஒரு முன்னாள் ஜனாதிபதி என்ற காரணத்தாலும் அவர் அதிர்ஷ்டம் இல்லாதவர் தான்.

அவர் மட்டுமல்ல அவரை அங்கீகரிக்க மறுத்த சிங்கள மக்களும் அதிர்ஷ்டம் இல்லாதவர்கள் தான். ஏனென்றால் அவரைப் போன்ற ஒரு தந்திரசாலி தான் சிங்கள மக்களைப் பேரரசுகளின் இழு விசைகளுக்குள் இருந்து காப்பாற்றக் கூடியவர். ஏனென்றால் எல்லாப் பேரரசுகளையும் சமதூரத்தில் வைத்திருக்கக் கூடிய ஒரு தலைவராக ரணில் மட்டுமே காணப்படுகிறார். இந்தத் தகுதி காரணமாகவே அவர் தமிழ் மக்களை அனைத்துலக அரங்கில் தோற்கடிக்கும் வாய்ப்புகளை அதிகமாக கொண்டிருந்தவர். மேற்கு மைய சமாதான முயற்சிகளில் ரணில் எப்பொழுதும் மேற்குடன் நிற்பார். மேற்கும் ஐநாவும் ரணிலுடன் நிற்கும். இதன் இறுதி விளைவாக தமிழ் மக்கள் அனேகமாக சமாதானம் என்ற பெயரில் ஒரு தருமர் பொறிக்குள் அகப்பட நேரிடும். அப்படியொரு தருமர் பொறிக்குள் இருந்து தப்புவதற்காகத் தான் விடுதலைப்புலிகள் இயக்கம் 2005இல் நடந்த தேர்தலில் தமிழ் மக்கள் ரணிலுக்கு வாக்களிப்பதைத் தடுத்தது.அன்ரன் பாலசிங்கம் அவரை நரி என்றும் அழைத்தார்.

அவர் ஒரு நரியாக இருப்பது தமிழ் நோக்கு நிலையில் ஆபத்தானது. பாதகமானது. ஆனால் சிங்கள நோக்கு நிலையில், அது சிங்கள பௌத்த அரசியலுக்கு அதிகம் வாய்ப்பானது. பாதுகாப்பானது. இலங்கை ஒரு குட்டித் தீவு. இந்தியப் பேரரசின் செல்வாக்கு மண்டலத்துக்குள் அமைந்திருக்கும் ஒரு குட்டித் தீவு.

அதேசமயம் பேரரசுகளின் வணிக வழிகளில் அமைந்திருப்பது என்பதனாலும் மற்றொரு பிராந்திய பேரரசு ஆகிய சீனாவின் உலகளாவிய விரிவாக்க வியூகத்தின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டு விட்டதனாலும் உலகில் உள்ள எல்லாப் பேரரசுகளினதும் இழுவிசைகளுக்குள் இலங்கை சிக்கியிருக்கிறது.

ஒரு குட்டித்தீவு என்ற அடிப்படையில் பேரரசுகளோடு புஜ பலத்தால் மோத முடியாத ஒரு நாடு.ஆனால் புத்தியால் மோதலாம். புத்தியால் தந்திரத்தால் சமாளிக்கலாம். சிங்கள மக்கள் தங்களைச் சிங்கத்தின் வாரிசுகளாக கருதலாம். ஆனால் நடைமுறையில் அவர்கள் சிங்கங்கள் அல்ல. ராஜதந்திரக் காட்டில் மிகச் சிறிய பிராணிகள் அவர்கள். உருவத்தில் சிறுத்த நரி தந்திரம் தான் செய்யலாம். எதிரியையும் எதிரியையும் மோத விட்டுத் தன்னைத் தற்காத்துக் கொள்ளலாம். அதைத்தான் ரணிலின் மாமனார் ஜெயவர்த்தனா ஈழப் போரில் செய்தார்.

மாமனைப் போலவே மருமகனும் ஒரு தந்திரசாலி. புஜ பலத்தை விடவும் புத்தி பலத்தை நம்பிய ஒரு தலைவர். பேரரசுகளின் ஆபத்தான இழு விசைகளுக்குள் சிக்கியிருக்கும் ஒரு சிறிய தீவின் தலைவர்கள் அப்படித்தான் இருக்கலாம். அவர்கள் நெஞ்சை நிமித்திக் கொண்டு முன் சென்றால் பேரரசுகள் ஒன்றில் அடித்து முறித்து விடும். அல்லது விழுங்கி விடும். இது ரணிலுக்குத் தெரியும். எல்லாச் சிங்களத் தலைவர்களுக்கும் தெரியும். ஆனால் இந்த ஆபத்தை கையாள்வதில் அவர்களிடம் வெவ்வேறு விதமான அணுகுமுறைகள் இருந்தன. இந்த விடயத்தில் ரணில் ஒரு தந்திரசாலியாக இருந்தார். தந்திரங்களின் மூலம் அதாவது புத்தி பலத்தால் தான் பேரரசுகளை வெட்டியோடலாம் என்பது அவருடைய அணுகுமுறை.

அவர் அவ்வாறு எல்லா பேரரசுகளையும் சம தூரத்தில் வைத்து அணுகக் கூடிய கெட்டித்தனமும் தந்திரமும் மிக்கவர் என்பதனால் தான், அவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரே சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில் அவருக்கு எதிராகப் போட்டியிட்ட டளஸ் அழகப்பெருமாவை ஆதரிக்குமாறு இந்தியா தமிழ்க் கட்சிகளிடம் கூறியதா?

மேற்கு நாடுகளுக்கும் இது தெரியும். அவரைக் கண்டபடி கையாள முடியாது. ஆனால் மேற்கு நாடுகளுக்கு ரணிலின் விடயத்தில் உள்ள ஆறுதலான விடயம் என்னவென்றால் அவர் என்றைக்குமே நாட்டை மேற்குக்கு எதிரான திசையில் செலுத்த மாட்டார் என்பது தான்.

ஏனென்றால் அவர் அவர்களுடைய குட்டையில் ஊறிய ஒரு மட்டை. எனவே ரணில் தந்திரசாலியாக இருந்தது சிங்கள மக்ககமானது ளுக்கு சாதக பாதுகாப்பானது. இலங்கை போன்ற ஒரு சிறிய நாடு பேரரசுகளின் மத்தியில் தப்பிப் பிழைப்பது என்றால் அதன் தலைவர் நரியாகத் தான் இருக்க முடியும். சிங்கமாக அல்ல.

ஆனால் சிங்களக் கூட்டு உளவியலானது சிங்கங்களைத் தான் தேடியது. அதனால் ரணில் சிங்கள பௌத்த அரசியலில் அதிஷ்டம் குறைந்த ஒருவராகவே காணப்படுகிறார். தேர்தல் மூலம் ஒரு ஜனாதிபதியாக வரும் கனவு அவரை பொறுத்தவரை இதுவரை பலிக்கவே இல்லை. அதன் விளைவாக சொந்தக் கட்சிக்குள்ளும் உடைவு.

இவ்வாறு ஒரு பலவீனமான இலக்காக அவர் இருந்தபடியால்தான் என்பிபி அவரைத் தூக்கியது. ஆனால் இப்பொழுது அவரை நோக்கி ஒரு திரட்சி ஏற்பட்டு இருக்கிறது. அவரைக் கைது செய்ததன் மூலம் எதிர்க்கட்சிகள் ஒன்று திரளக் கூடிய வாய்ப்புகள் அதிகரித்து விட்டன. ஆனால் மக்கள் எழுச்சிகளின் பின்னணியில் எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டி தலைமை தாங்கவல்ல தலைவர்கள் எதிர்க்கட்சிகள் மத்தியில் இல்லாத ஒரு வெற்றிடத்தில் தான் என்பிபி வெற்றி பெற்றது.(22ம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பிரதமர் மோடியின் சீனப் பயணம் அமெரிக்காவுக்கு சொல்லும் செய்தி என்ன?



டொனால்ட் டிரம்பின் அமெரிக்க வரி விதிப்புகளின் தாக்கம் இன்னும் மனதை உறுத்தும் முக்கிய விசயமாக இருக்கும் நிலையில், இந்திய பிரதமர் நரேந்திர மோதி சீனா சென்றுள்ளார்.

03 செப் 2025 புதன்கிழமை முதல் வைரங்கள் மற்றும் இறால் போன்ற அமெரிக்கா விற்குச் செல்லும் இந்திய பொருட் களின் மீதான வரி இப்போது 50வீதமாக ஆக உள்ளது இது ரஷ்ய எண்ணெயை இந்தியா தொடர்ந்து வாங்குவதற்கான தண்டனை என்று அமெரிக்க அதிபர் கூறுகிறார்.

இந்த வரிகள் இந்தியாவின் துடிப்பான ஏற்றுமதித் துறை மற்றும் அதன் வளர்ச்சி இலக்குகள் மீது நீடித்த காயங்களை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

சீனாவின் ஷி ஜின்பிங்கும் மந்தமான சீன பொருளாதாரத்தை புதுப்பிக்க முயற்சிக்கிறார், இந்த நேரத்தில் வான ளாவிய அமெரிக்க வரிகள் அவரது திட்டங்களைத் தடம்புரளச் செய்யும் வகையில் அச்சுறுத்துகின்றன.

இந்த பின்னணியில், உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டு நாடுகளின் தலைவர்களும் சந்தித்து ள்ளனனர். பெரும்பாலும் எல்லை தகராறுகள் காரணமாக இரு நாட்டு உறவுகளும் அவநம்பிக்கைக்குரியதாக இருந்தது. இப்போது இரு தலைவர் களும் தங்கள் உறவில் ஒரு புத்து ணர்வை எதிர்பார்க்கலாம்.

எளிமையாகச் சொல்வதானால், இந்த உறவில் என்ன நடக்கிறது என்பது உலகின் பிற பகுதிகளுக்கு முக்கிய மானது' என்று சாத்தம் ஹவுஸ் எனும் சிந்தனைக்குழுவைச் சேர்ந்த சிட்டிஜ் பாஜ்பாய் மற்றும் யூ ஜி ஆகியோர் சமீபத்திய தலையங்கத்தில் எழுதினர்.

மேற்கத்திய நாடுகள் (குறிப்பாக அமெரிக்கா) நினைத்தது போல் சீனாவுக்கு எதிரான அரணாக இந்தியா ஒரு போதும் இருக்கப் போவதில்லை. மோதியின் சீனப் பயணம் ஒரு சாத்தியமான திருப்பு முனையைக் குறிக்கிறது.

## வலுவான உறவு என்றால் என்ன?

இந்தியா மற்றும் சீனா முறையே உலகின் ஐந்தாவது மற்றும் இரண்டா வது பெரிய பொருளாதார சக்தி மையங்களாக உள்ளன. ஆனால் இந்தியா பொருளாதார வலிமையில் 2028ம் ஆண்டில் மூன்றாவது இடத் திற்கு முன்னேறும் பாதையில் உள் ளது என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

வழக்கமாக உலகின் மிக முக்கியமான, பெரிய பொருளாதாரங்களான சீனாவும் இந்தியாவும் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்பட முடியும் என்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது' என்று பெய்ஜிங்கில் உள்ள வுசாவா அட்வைசரியின் நிறுவனரும் தலைமை நிர்வாகியுமான கியான் லியு கூறுகிறார். ஆனால் இந்த உறவு மிகவும் சவாலானது.

இரு தரப்பினரும் தீர்க்கப்படாத மற் றும் நீண்டகால பிராந்திய சர்ச்சை யைக் கொண்டுள்ளனர் இது மிகவும் பரந்த மற்றும் ஆழமான போட்டியைக் குறிக்கிறது.

2020 ஜீன் மாதம் லடாக்கின் கால்வான் பள்ளத்தாக்கு முழுவதும் வன்முறை வெடித்தது இது 40 ஆண்டுகளுக் கும் மேலாக இரு நாடுகளுக்கும் இடையிலான மிகமோசமான பகைமை காலமாக இருந்தது.

இதன் விளைவு பெரும்பாலும் பொரு ளாதார ரீதியில் இருந்தது நேரடி விமான சேவைகளை மீண்டும் தொட ங்குவது பற்றிய பேச்சுகள் நிறுத்தப் பட்டன, விசாக்கள் மற்றும் சீன முதலீடுகள் நிறுத்தி வைக்கப்பட்டன. இது இந்தியாவின் உள்கட்டமைப்பு திட்டங்களை தாமதப்படுத்தியது. டிக்டாக் உட்பட 200 க்கும் மேற்பட்ட சீன செயலிகளை இந்தியா தடை செய்தது. இந்தியா-சீனா உறவுகளை ஆசியாவின் நிலையான வளர்ச்சிக்கு முக்கியமானதாக பார்க்கும் சக்திகளின் எதிர்பார்ப்புகளை சரியாக எதிர்கொள்ள பேச்சுவார்த்தையே அவசியம்,' என் கிறார் IISS நிறுவனத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பாதுகாப்பு, உத்தி, ராஜதந்திர நிபுணர் அன்டோ யின் லெவெஸ்க்யூஸ். திபெத், தலாய் லாமா மற்றும் இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் ஒரு நதியின் குறுக்கே உலகின் மிகப்பெரிய நீர்மின் திட்டத்தை உருவாக்குவதற்கான சீனாவின் திட்டங்கள் குறித்த நீர் தகராறுகள் பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுடனான பதற்றங்கள் உள்ளிட்ட பிற பிளவுகளும் இரு நாடுகளுக்கு இடையில் உள்ளன.

பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானுக்கு சீனா ஒரு முக்கிய வர்த்தக பங்காளியாக இருக்கும் அதேவேளை, தெற்காசியா வில் உள்ள அதன் பெரும்பாலான அண்டை நாடுகளுடன் இந்தியா தற்போது நல்ல உறவில் இல்லை.

ஒரு BYD (பிஒய்டி) தொழிற்சாலை இந்தியாவுக்கு வந்தால் நான் ஆச்சரி யப்படுவேன், ஆனால் இதில் சில சிறிய அளவிலான வெற்றிகள் இருக்கலாம்' என்று ஆராய்ச்சி நிறுவனமான ஆசியா டிகோடெட் நிறுவனரும் முதன்மை பொருளாதார நிபுணருமான பிரியங்கா கிஷோர் கூறுகிறார்.

நேரடி விமான சேவைகள் மீண்டும் தொடங்கப்படும் என்றும், விசாக்களில் அதிக தளர்வுகள் மற்றும் பிற பொரு ளாதார ஒப்பந்தங்கள் இருக்கலாம் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ள்ளது.

## இந்தியாவின் நிலைப்பாடு மாறி விட்டது

இருப்பினும் டெல்லிக்கும் பெய்ஜிங்கிற் கும் இடையிலான உறவு 'நிச்சயமாக ஒரு சங்கடமான கூட்டணி' என்று பிரியங்கா கிஷோர் குறிப்பிடுகிறார்.

ஒரு கட்டத்தில், சீன செல்வாக்கை மட்டுப்படுத்த அமெரிக்காவும் இந்தியா வும் நெருங்கி வந்தன என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று அவர் மேலும் கூறுகிறார்.

ஆனால் அமெரிக்கா மற்றும் அதன் நிலைப்பாடு குறித்து இந்தியா முற்றி லும் குழப்பமடைந்துள்ளது: இது ஒரு புத்திசாலித்தனமான நகர்வு - மேலும் இந்தியாவும் சீனாவும் உலகின் பன்முகத்தன்மைக்கு வலு சேர்க்கிறது'

மேற்கத்திய நாடுகளுக்கு ஒரு மாற்று உலகக் கண்ணோட்டத்தை முன் வைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு பிராந்திய அமைப்பான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் ( ஞஊழு) கூட்டத்தில் பங்கேற்க மோதி சீனா சென்றுள்ளார். இந்த அமைப்பில் சீனா, இந்தியா, இரான், பாகிஸ்தான் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் உறுப்பினர் களாக உள்ளனர்.

கடந்த காலங்களில், இந்தியா இந்த அமைப்பின் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட்டுள்ளது. பல ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க முக்கிய த்துவத்தை வழங்கவில்லை என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

ஜீன் மாதம் நடந்த ஷாங்காய் ஒத்து ழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் கூட்ட றிக்கை குறித்து இந்தியாவுக்கு உடன் பாடு ஏற்படவில்லை. இந்திய நிர்வாக த்தில் உள்ள காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் மீது கடந்த ஏப்ரல் 22-ஆம் தேதி நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல் பற்றி எதுவும் குறிப்பிடா தது குறித்து இந்தியா ஆட்சேபனை களை எழுப்பியது. இந்நிகழ்வு இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பல தசாப்தங்களில் மிக மோசமான மோதல்களுக்கு வழிவகுத் தது.

ஆனால் வாஷிங்டனுடனான டெல்லி யின் உறவுகளில் ஏற்பட்ட சரிவு இந்த அமைப்பின் பயன்பாட்டை மீண்டும் கருத்தில் கொள்ள இந்தியாவைத் தூண்டியுள்ளது என்று நிபுணர்கள் கூறுகின்றனர். டிரம்பின் வரி யுத்தத் திற்கு மத்தியில், சீனா உலகளாவிய தெற்கின் ஒற்றுமை குறித்து யோசிக் கக் கூடும்.

சீனாவும் இந்தியாவும் உறுப்பினர் களாக இருக்கும் பிரிக்ஸ் (BRICS) அமைப்பு டிரம்பின் கோபத்துக்கு ஆளாகியுள்ளது. அவர் இந்த அமைப் பின் உறுப்பு நாடுகள் மீது, ஏற்கெ னவே பேசப்பட்ட வரிகளை விட கூடு தல் வரி விதிப்பதாக மிரட்டியுள்ளார்.

மோதி கடைசியாக ஷி ஜின்பிங்கையும் ரஷ்யாவின் விளாடிமிர் புதினையும் அக்டோபர் 2024-ல் ரஷ்யாவில் நடந்த பிரிக்ஸ் மாநாட்டில் சந்தித்தார். கடந்த வாரம், சீனா, இந்தியா, ரஷ்யா மூன்று நாடுகளின் பேச்சுவார்த்தை விரைவில் நடக்கும் என்று ரஷ்ய தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனாவின் உற்பத்தித் திறன், இந்தியா வின் சேவைத் துறை பலம், ரஷ்யா வின் இயற்கை வளங்கள் - இவற் றைப் பயன்படுத்தி அமெரிக்கா மீதான சார்ந்திருத்தலை குறைத்து, ஏற்றுமதி சந்தைகளை பரவலாக்கி, உலக வர்த் தக ஓட்டத்தை மாற்றியமைக்க முடி யும்,' என்று பஜ்பாய் மற்றும் யூ அவர்களின் கட்டுரையில் குறிப்பிட்டுள் ளனர்.

அதேநேரம் மற்ற பிராந்திய கூட்டணி களையும் பயன்படுத்த இந்தியா முனைகிறது. மோதி சீனாவுக்குச் செல்லும் வழியில் ஜப்பானுக்கும் செல் கிறார்.

## சீனா - இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு சாத்தியமா?

இந்தியா தனது உற்பத்திக்காக சீனா வைச் சார்ந்திருக்கிறது, தம் உற்பத்தி க்கு தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உதிரிபாகங்களை அங்கிருந்து வாங்குகிறது.

இந்தியாவின் கடுமையான தொழில் துறை கொள்கைகள் சீனாவிலிருந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு தொழில் துறை விநியோகச் சங்கிலி மாறுவது மூலம் கிடைக்கும் பலனை பெறவிடாமல் தடுத்துள்ளன என்று நிபுணர்கள் கூறுகின்றனர். இந்தியா எலக்ட்ரானிக் உற்பத்தியில் வலுவாக இருப்பதன் காரணமாக அந்த விஷயத் தில் கூட்டுறவுக்கான ஒரு வலுவான□

(22ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி மாவட்ட எம்.பி சிறிதரன் குறித்து அப்பகுதியின் செய்தியாளரின் விமர்சனம்!

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



அரசியல் மோசடிகள் பலவிதமானவை. அத்தகைய மோசடிகளை, தவறுகளை, குற்றங்களை இழைத்தவர்கள் எல்லாம் இலங்கையில் தண்டனை பெறும் காலமொன்று உருவாகியுள்ளது.

'அரகலய' என்ற மக்கள் எழுச்சி உருவாக்கிய வெற்றிகளில் இதுவும் ஒன்று. அதுவே ஆட்சி மாற்றம், அரசியல் மாற்றங்களைக் கொண்டு வந்தது.

அத்தகைய விழிப்புணர்வும் எழுச்சியும் தமிழ்ச் சமூகத்திலும் நிகழ வேண்டும். நிகழும். அப்படி நிகழ்ந்தால் தான் மோசடிக்காரர்களும் பிற்போக்கானோரும் சமூக விரோதிகளும் விலக்கப்படுவார்கள், தண்டனைக்குள்ளாக்கப்படுவர்.

தமிழ்த் தரப்பில் அரசியல் ரீதியான விமர்சனங்களுக்கு உள்ளாகிவருபவர் சிவஞானம் சிறிதரன். எத்தகைய கூச்சமும் தயக்கமும் இல்லாமல் தன் நெஞ்சறியப் பொய் சொல்வதிலிருந்து அடாத்தாக நடப்பது, ஏமாற்றுவது, மோசடி செய்வது எல்லாமே அவருக்குப் பெருங்கலை என்று பார்ப்பவர்களும் உண்டு.

இதைப் பற்றிய கடுமையான விமர்சனங்கள் ஆயிரமாக இருந்தாலும் அதில் இதுவரையில் அவர் வெற்றிகளையே பெற்றுள்ளார். அதொரு தீராச் சுவையாக மாறியுள்ளது. அதனால் அதையே அவர் தொடர்ந்தும் செய்து கொண்டிருக்கிறார். அந்தச் சுவை அவரை எல்லை கடந்து செல்ல வைக்கிறது என்று பார்க்கப்படுகின்றது.

இதற்கு ஏராளம் உதாரணங்கள் உண்டு. எளிய அண்மைய உதாரணம், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றுச் சிறப்புப் பிரிவுக்கு (25.08.2025) சென்று, அதனுடைய இயங்கு நிலை பற்றிப் பேசியிருப்பதாகும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அதைச் செய்வதற்கு அவருக்கு உரிமையும் தகுதியும் உண்டு. ஆனால், அதை அவர் செய்திருக்க வேண்டியது நேற்றல்ல. அதற்கு முன்பாகவே செய்திருக்க வேண்டும்.

அதற்கு முன்பு என்றால் பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றுச் சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு (திறந்து வைக்கப்பட்டு) ஓராண்டாகிய பின்னரும் அது இயங்காமலே உள்ளது. மட்டுமல்ல, பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றுச் சிறப்புப் பிரிவு இயங்காமல் இருப்பதைக் காரணம் காட்டி, அந்தப் பிரிவிலுள்ள சில உபகரணங்களை பிற மருத்துவனைகளுக்கு இடமாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போதெல்லாம் சிறிதரன் இதைப் பற்றிப் பேச முன் வரவேயில்லை. அதைப் பற்றி அவருக்கும் தெரியாது. அவருடைய ஆட்களுக்கும் தெரியாது. அவர்களுக்கு அதைப் பற்றியெல்லாம் அக்கறையே இல்லை.

இந்த நிலையில் மருத்துமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் 05.06.2025 இல் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனைச் சந்தித்து இந்தப் பிரிவின் நிலைமையை விளக்கிப் பேசியிருந்தது. அத்துடன் கண் சிகிச்சைக்குரிய நிபுணர் இல்லை என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தது. மட்டுமல்ல, Medical ward பற்றாக்குறையையும் எடுத்து விளக்கியது. பெண் நோயியல் மற்றும் மகப்பேற்றுச் சிறப்புப் பிரிவு புதிய தொகுதியில் இயங்கத் தொடங்கினால், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் மகப்பேற்று விடுதிகளை Medical ward களுக்கு வழங்க முடியும் என்பதையும் எடுத்துக் கூறியது.

இதனை அடுத்து, ஆளுநர் அடுத்த வாரமே கிளிநொச்சி மாவட்டப் பொதுமருத்துவமனைக்கு நேரிற் சென்று குறித்த பிரிவைப் பார்வையிட்டு, பணிப்பாளருடனும் பேசியிருந்தார். கூடவே வடமாகாண சுகாதார செயலாளரும் பார்வையிட்டிருந்தார்.

ஆனாலும் நிலைமைகளில் உடனடிச் செயற்பாட்டு விளைவு கிட்டியிருக்கவில்லை. அல்லது தாமதங்கள் ஏற்பட்டன. அதற்குரிய தயார்ப்படுத்தல்களை அவர்கள் மேற்கொண்டிருக்கக் கூடும்.



செயற்பாடுகள் தாமதமடைய பிரச்சினைகள் வேறு விதமாக மாறத் தொடங்கின. ஏற்கனவே இயங்கி வருகின்ற மகப்பேற்றுப் பிரிவின் கட்டில்களே உக்கிச் சிதைவடைந்த கட்டத்துக்கு வந்திருந்தன. அத்துடன். கண் சிகிச்சை மற்றும் அறுவைச் சிகிச்சைப் பிரிவு போன்றவற்றுக்கும் நிபுணர்கள் இல்லாமல் அதுவும் இயங்கா நிலைக்குள்ளாகி, நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ளத் தொடங்கினர்.

இந்த நிலையில் நோயாளர் நலன்புரிச் சங்கம் தவிர்க்க முடியாமல் நோயாளரின் நிலை நின்று செயற்பட வேண்டிய கட்டத்துக்குத் தள்ளப்பட்டது. ஆகவே இவற்றை இயங்க வைப்பதற்கான அழுத்தங்களை ஊக்கத்தை அளிக்க வேண்டும் என நோயாளர் நலன்புரிச் சங்கம் பல்வேறு தரப்புகளோடும் பேசி தொடர்ந்தும் முயற்சிகளை எடுக்கத் தொடங்கியது.

அதேவேளை இதற்கான அழுத்தப் போராட்டமொன்றை 29.98.2025 வெள்ளிக்கிழமை காலை நடத்துவதற்குத் தீர்மானித்து, அதற்கான ஊடகவியலாளர் சந்திப்பை 22.08.2025 இல் நடத்தியது. இந்தச் செய்தி அன்று இணையத் தளங்களிலும் மறுநாள் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது.

அத்துடன் இந்தப் போராட்டத்துக்கு மக்களின், மாவட்ட பொது அமைப்புகளின் ஒத்துழைப்பைக் கோரும் பிரசுரமொன்றையும் அச்சிட்டு விநியோகித்திருந்தது. திட்டமிட்டபடி அழுத்தப் போராட்டத்துக்கான ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

இதேவேளை மறு பக்கத்தில் இந்தப் பிரிவை இயங்க வைப்பதற்கான சிறப்புக் கூட்டமொன்றை 25.08.2025 பி.ப 5.00 மணிக்கு வடமாகாண ஆளுநர் ஏற்பாடு செய்திருந்தார். மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ் பல்கலைக்கழக மருத்துவத்துறைத் தலைவர், யாழ் போதானா மருத்துவமனைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், குறித்த பிரிவுகளுக்கான சிறப்பு மருத்துவ நிபுணர் அணி, கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைப் பணிப்பாளர், கிளிநொச்சிப் பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் போன்ற பல்வேறு தரப்பினருடன் நடத்துவதற்கு இந்த ஏற்பாட்டை அவர் செய்திருந்தார்.

இந்த நிலையில் தான் (இந்தத் தகவல்களை எல்லாம் எப்படியோ அறிந்து கொண்ட) சிறிதரன், திடீரென விழித்துக் கொண்டவராக மாவட்டப் பொதுமருத்துவமனைக்குச் சென்று (25.08.2025) குறித்த பிரிவைப் பார்வையிட்டு இயங்க வைப்பது பற்றிப் பேசுவதாகப் படங்காட்டியிருக்கிறார். அதாவது தானே இந்த பெண் நோயியல் சிறப்பு மகப்பேற்றுப் பிரிவை இயங்க வைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்கிறேன். தன்னுடைய முயற்சியின் விளைவாகத்தான் இனிமேற் காரியங்கள் எல்லாம் நடக்கப்போகின்றன என்ற விதமாக.

இது தொடர்பாக சிறிதரனின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள்... சிறிதரனே முதன்முதலாக மின்சாரத்தைக் கண்டு பிடித்தவர், சிறிதரனே அவரே இந்தப் பூமியில் அதியற்புதமான விடயங்களை எல்லாம் செய்து கொண்டிருப்பவர் என்ற றேஞ்சில் உள்ளது.

இது எவ்வளவு சிரிப்புகிடமானது? எத்தனை பெரிய ஏமாற்று? என்ன மாதிரியான கோமாளித்தனம்? பெரிய அரசியல் மோசடி? எத்தகைய சிறுமை?

இதொன்றும் சிறிதரனுக்குப் புதியது இல்லை. அவர் ஆசிரியராகக் கற்பித்த காலத்திலிருந்தே இப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறார் என்கின்றனர் அவருடன் கூடப் பணியாற்றியவர்கள். அதனால் தான் அவரால் ஒரு சிறந்த ஆசிரியராக எந்த மாணவராலும் எந்தப் பாடசாலையினாலும் நினைவு கூர முடியவில்லை எனவும் வாதிடுகின்றனர்.

அரசியலில் ஈடுபடத் தொடங்கிய பிறகு சிறிதரன் சொன்ன, சொல்லி வரும் பொய்களும் செய்த, செய்து வரும் ஏமாற்றுகள் அதிகம்.

இங்கே பிரச்சினை அதுவல்ல. ஏனென்றால் சிறீதரன் அப்படித் தான் (இவ்வாறான குணங்களுடன்தான்) இருக்கிறார். இருக்கப்போகிறார். அவருடைய ருசியும் வழியும் அதுவாகும்.

ஆனால் 2010 இலிருந்து இப்போது வரையான 15ஆண்டுகள், (நான்கு தடவை) பாராளுமன்றப் பிரதிநிதியாக இருப்பவர், தான் பிரதிநிதித்துவம் செய்து வருவதாகக் கூறும் கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னேற்றத்துக்கு ஆற்றிய சிறப்பான பங்களிப்பு என்ன? கல்வித்துறையில் — மருத்துவத்துறையில் — விவசாய மேம்பாட்டுக்கு — சூழல் விருத்திக்கும் சுசூழல் பாதுகாப்புக்கும் — கடற்றொழில் விருத்திக்கு — பனை தென்னை வளத் தொழிலுக்கும் தொழிலாளர் நலனுக்கும் — பெண் தலைமைத்துவக் குடும்பத்தினரின் வாழ்க்கை உயர்வுக்கு - மாற்றுத் திறனாளிகளின் எதிர் காலத்துக்கு — விடுதலைப் புலிகளின் போராளிகளாகச் செயற்பட்டு — இன்று சிரமமான வாழ்க்கைச் சூழலை எதிர் கொண்டிருப்பவர்களின் வாழ்க்கைக்கு — பிரதேசங்களின் அபிவிருத்திக்கு — இளைய தலைமுறையினரின் திறன் விருத்தி, தொழில் வாய்ப்புகளுக்கு — பண்பாட்டு வளர்ச்சிக்கு — வரலாற்றுத்துறைக்கு — இலக்கிய மேம்பாட்டுக்கு — சமூக வளர்ச்சிக்கு இதில் எத்தகைய பங்களிப்புகளையும் வழங்கியதாகக் குறிப்பிட முடியாத நிலையில்தான் அவருடைய பிரதிநிதித்துவச் சிறப்பு உள்ளது.

ஏற்கனவே பதவியில் இருந்த முருகேசு சந்திரகுமார், விஜயகலா மகேஸ்வரன், மாவை சேனாதிராஜா, அங்கயன் ராமநாதன், மனோ கணேசன், திகாம்பரம் போன்றோரின் நிதி ஒதுக்கீடு, செயற்திட்டங்களை தன்னுடைய வேலையாகவும் முயற்சியின் விளைவாகவும் கிடைத்ததாகவோ நடைபெற்றதாகவோ காட்டுவதே அவருடைய தந்திரோபாயமாக இருந்தது.

மற்றும்படி சுயமாகச் சிந்தித்து, சரியாக ஒரு திட்டத்தை இனங்கண்டு, அதைச் செயலாக்கமாக மாற்றுவதற்கு அர்ப்பணிப்போடு சிறிதரனோ அவருடைய அணியினரோ முயற்சித்ததே இல்லை. அவர்களுடைய அரசியல் முதலீடுகளும் செயற்பாடுகளும் வாய்ப்பேச்சிலும் முகநூல் வம்பளப்பிலுமே கழிந்தது.

சிறிதரனின் செல்வாக்குக்கு உட்பட்ட பிரதேச சபைகளினால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் தான் குறித்துச் சொல்லக் கூடியன. அவற்றில் பல இயங்கா நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டன. அவற்றில் ஒன்று, ஆனையிறவு சந்தை வளாத்தில் நிர்மாணிக்கப்பட்ட கடைத் தொகுதிகள். மற்றது, பூநகரி வாடியடியில் கட்டி இடிக்கப்பட்ட சந்தை. அடுத்தது, கரடிப்போக்குச் சந்தியில் மாற்றுத் திறனாளிகள், முன்னாள் போராளிகளுக்கான உதவி என்ற பேரில் கட்டி இடிக்கப்பட்ட கடைகள். இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம்.

(20ம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி மாவட்ட எம்.பி சிறிதரன் குறித்து அப்பகுதியின் செய்தியாளரின் விமர்சனம்!

(19ம் பக்கத் தொடர்ச்சி) ஆனால், எங்காவது, எவராவது ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசினால் அங்கே ஓடோடிப் போய் தானே அதைப் பார்த்துச் சீர்ப்படுத்துகின்றவராக நிற்கிறார் தோற்றம் காட்ட முற்படுகிறார். (இதற்காக சிலர் கையாட்களாக இருக்கிறார்கள் என்பதை இன்னொரு சந்தர்ப்பத்தில் காட்டலாம். அப்படியானவர்கள் தான் சிறிதரன் போன்றவர்களைக் காப்பாற்றுவதற்கும் தொடர்ந்து தீங்குகள் நடப்பதற்கும் காரணமானவர்கள். இதில் ஆசிரியராக இருப்பர் தொடக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளவர்கள் உண்டு).



இது ஏன்? பதிலாக தானாகவே ஒன்றைக் கண்டு பிடிக்கவோ, ஒன்றைப் புதிதாகத் திட்டமிடவோ, ஒரு விடயத்தைச் செய்து முடிக்கவோ அவராலும் அவருடைய ஆதரவாளர்களாலும் முடியாதிருப்பது ஏன்?

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகூடிய காலம் தொடர்ச்சியாக பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்துக் கொண்டிருப்பவர் சிறிதரன். இந்தப் பதினைந்து ஆண்டு காலப் பகுதியில் எவ்வளவு சிறப்பான திட்டங்களை அறிமுகப்படுத்தி — உருவாக்கி வெற்றியடையச் செய்திருக்க முடியும்!

குறைந்த பட்சமாக இரண்டு படைமுகாம்களையாவது விலக்குவதற்குப் போராடியிருக்கலாம். அல்லது உண்மையைப் பேசி சமூகங்களின் நல்லிணக்கத்தைப் பேணி, மக்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்கான தீர்வைக் காண முயற்சித்திருக்கலாம்.

தான் படித்த, படிப்பித்த, வாழ்ந்த கிளிநொச்சி மாவட்டம் போரினால் முற்றாகவே அழிந்தது. அதை மீளக் கட்டியெழுப்பவும் அங்கே கல்வியை மேம்படுத்தவும் உழைத்திருக்கலாம். அப்படியெல்லாம் சிறிதரன் செயற்படவும் இல்லை.முயற்சிக்கவும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் எல்லாவற்றையும் குழப்பிப் பாழ்படுத்தினார். அமைப்புகளையும் மக்களையும் தன்னுடைய அரசியலுக்காகப் பிளவுபடுத்தினார். எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், வர்த்தகர்கள் தொடக்கம் கோயில்களின் நிர்வாகம், கூட்டுறவு அமைப்புகள், விவசாய அமைப்புகள் எனச் சகலவற்றையும் பிளவுபட வைத்திருக்கிறார்.

கிளிநொச்சிக்கு வெளியே முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற அயல் மாவட்டங்களில் இந்த நோயில்லை. அங்கும் மாற்றுக் கருத்தாளர்கள், மாற்று அரசியற் சிந்தனையுடையோர், மறு அரசியற் தரப்பினர், அவற்றின் ஆதரவாளர்கள், மாற்று அணிகள் எல்லாம் உண்டு. ஆனால், அங்கே ஒரு ஜனநாயக அடிப்படை பேணப்படுவதுண்டு. விழுமியங்களுக்கான மதிப்புண்டு.

கிளிநொச்சியில் அதெல்லாம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டாயிற்று. இங்கே பிரதேச சபைகளின் நூலகங்களில் கூட சாதி பார்ப்பதைப் போல வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. இதற்கு ஒத்து ஊதும் நிர்வாக அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பது மிகக் கவலைக்குரியது. இதைக் குறித்து யாராவது கேள்வி எழுப்பினால் அவர்களை அவதூறு செய்து அடக்குவதற்கு முற்பட்டார் சிறிதரன். இதற்காக அவர் தன்னோடு ஒரு மூன்றாந்தரமான அணியொன்றை உருவாக்கியும் வைத்திருந்தார்

வைத்திருக்கிறார். இதெல்லாம் அவர் மீதான குற்றச்சாட்டுகளோ விமர்சனங்களோ மட்டுமல்ல, அவரைக் குறித்த உண்மையான விவரங்களாகும். இப்படியானவரை எப்படி தமிழரசுக் கட்சி தன்னுடைய அரசியற் பயணத்தில் அனுமதித்திருக்கிறது?

சிறிதரனை மக்கள் ஆதரிப்பதால், தமிழரசுக் கட்சி அதற்கு அந்த மக்கள் தெரிவுக்கு மதிப்பளித்து அனுமதித்துள்ளது அதனால் அவரைக் கட்சியில் வைத்திருக்கிறது என்று சுமந்திரனோ அல்லது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த வேறு எவருமோ சொல்லலாம்.

கோட்டபாய ராஜபக்ஸவையும் மக்கள் தான் ஆதரித்தனர். மேர்வின் சில்வாவையும் விமல் வீரவன்ஸவையும் தான் ஆதரித்தனர். வாக்களித்தனர். அதற்காக அவர்கள் எல்லாம் சரியாகச் செயற்படும் ஆட்களா? மெய்யாகவே நாட்டுக்கும் சமூகத்துக்கும் நன்மையைத் தரக்கூடிய நபர்களா?

சிறிதரனை முதன்மைப்படுத்தி மேடைகளில் ஏற்றிப் போற்றும் எழுத்தாளர்கள் இதைக் குறித்தெல்லாம் என்ன விளக்கம் சொல்ல முடியும்?

இவர்கள் தாம் கொண்டுள்ள நெருக்கத்தைப் பயன்படுத்தி, சிறிதரனை நெறிப்படுத்தலாம். பயனுள்ள பணிகளைச் செய்விக்கலாம். அந்தப் பொறுப்பு அவர்களுக்குண்டு. அல்லது அவரிடம் இவற்றைக் குறித்துக் கேள்விகளை எழுப்ப வேண்டும்.

எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் சமூகத்தின் பிரதிநிதிகளாவர். ஒரு வகையில் சமூகத்தை வழிப்படுத்துகின்றவர்கள், பண்படுத்துகின்றவர்கள். சமூக விமர்சனத்தை அடிப்படையாகக் கொண்டோர். என்பதால் இவர்களுக்கெல்லாம் இதில் பொறுப்புண்டு.

சிறிதரனை ஆதரிக்கும் அமைப்புகள், உத்தியோகத்தர்கள், அதிகாரிகள், பிரமுகர்கள் எல்லோரும் இதைக் குறித்தெல்லாம் என்ன சொல்லப் போகிறார்கள்? ஆனால் ஒன்று, இவர்கள் எல்லோரும் இந்தத் தீமைக்கு தவறுக்கு ஏமாற்றுக்குப் பொறுப்பாளிகள்...

அப்படி இவர்கள் பொறுப்பெடுக்கத் தவறினால் இந்தத் தவறுகள் பெருகிச் செல்லும். ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டம் அனைத்து நிலைகளிலும் மிகப் பின்தங்கியே உள்ளது. தவறுகளின் விளைவே அதுவாகும். அரசியற் பழிவாங்கல்களும் தனக்கு வேண்டியவர்களுக்குச் சார்பான நடவடிக்கைகளும் சமூகத்தையும் மாவட்டத்தையும் பின்தள்ளியுள்ளது. வேண்டுமானால் பழிவாங்கப்பட்டோரின் பட்டியலை சமர்ப்பிக்க முடியும்.

புலிகளின் பெயரைப் பயன்படுத்தி, மாவீரர்களின் தியாகத்தைச் சொல்லி அரசியல் லாபத்தை அறுவடை செய்கின்ற சிறிதரன் தரப்பு, மாவீரர்கள் குடும்பங்களுக்கு ஆற்றிய பங்களிப்புகள் என்ன? புலிகளின் செயற்பாடுகளில், அவர்கள் உருவாக்கிய விழுமியங்களில் எவற்றைப் பின்பற்றுகின்றனர்? குறைந்த பட்சம் நான்கு இடங்களில் மரங்களையாவது உருப்படியாக நட்டிருக்கின்றனரா? பதிலாக மணலை அகழ்ந்தெடுப்பதும் மரங்களை — காடுகளை அழிப்பதும் சூழலைக் கெடுப்பதுமே நிகழ்த்தப்படுகின்றன.

போதாக்குறைக்கு கிளிநொச்சியில் உள்ள சனத்தொகை ஒரு லட்சத்து எண்பது ஆயிரம். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மதுச்சாலைகளின் எண்ணிக்கை 20 க்கு மேல்.

இதைக் குறித்து ஒரு சொல் சிறிதரன் இதுவரையில் வெளியே பேசியதில்லை. பல பொதுக்காணிகள் (அரச காணிகள்) வசதி, அதிகாரம் படைத்தோரால் அபகரிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பற்றி மக்கள் பிரதிநிதி, மண் பற்றாளன் வாய் திறப்பதே இல்லை. இவையெல்லாம் சிறிதரனின் கோட்டைக்குள்தான் நடக்கின்றன. ஆனால், சிங்கம் கண் மூடித் தூங்குகிறது. (தொடரும்)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஜனாதிபதித் தேர்தலில் அநுரவை ஆதரித்த ரணிலும் அதற்காக அவர் கொடுக்கும் விலையும்




ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலைக்குப் பின்னர் அவரது மனைவி ஹேமா பிரேமதாச, கொழும்பு மத்திய தொகுதியை கோரினார். ஏனெனில் அதன் நீண்டகால அமைப்பாளர் சிறிசேன கூரே, 1994 பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்திருந்தார்.

அதேநேரத்தில் 1993 மாகாணசபைத் தேர்தலில் கம்பகாவில் உள்ள பியகமவில் அவமானகரமான தோல்விகளைச் சந்தித்த ரணில் விக்ரமசிங்க கொழும்பிலிருந்து போட்டியிடுவதற்கு தனது பார்வையை திருப்பினார்.

கூரேயின் பின்புல ஆதரவுடன், கொழும்பு மத்திய தொகுதியை, ரணில் கட்சித் தலைவர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவிடம் கேட்டார்.

கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இருந்து ஹேமாவின் பெயரை நீக்க ரணிலும் கூரேயும் சேர்ந்து சூழ்ச்சி செய்தனர்.கொழும்பு மாநகரசபை வேட்புமனு மண்டபத்திற்கு வந்த போது தான், ஹேமா தனது பெயர் நீக்கப்பட்டிருப்பதை கண்டுபிடித்தார்.

பிரேமதாசவின் எதிர்ப்பாளராக அறியப்பட்டாலும், ஹேமாவின் இந்த நிலை குறித்து காமினி திசாநாயக்க கவலைப்பட்டார். 1994இல் அவர் எதிர்க் கட்சித் தலைவராகவும் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகவும் ஆன போது, காமினி திசாநாயக்க, சஜித் பிரேமதாசவை அரசியலுக்கு அழைத்தார்.

அவருக்கு கொழும்பு மத்திய தொகுதியை வழங்குவதாக உறுதியளித்தார். ஆனால் காமினியின் படுகொலை எல்லாவற்றையும் மாற்றியது. ரணில் கட்சித் தலைவராக உயர்ந்து, நீ அரசியல் செய்ய விரும்பினால், அம்பாந்தோட்டைக்குச் செல் என்று சஜித்திடம் வெளிப்படையாகக் கூறினார்.

மத்திய கொழும்பு தனக்கு ஒரு போதும் வழங்கப்படாது என்பதை உணர்ந்த சஜித், எந்தத் தொகுதியையும் ஏற்றுக் கொண்டு அம்பாந்தோட்டையில் தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார். சஜித்தின் வருகை ராஜபக்ச குடும்பத்தை அமைதியற்ற நிலைக்குள்ளாக்கியது.

தங்கள் களத்தைப் பாதுகாக்க, ரணில் அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர்களான மேர்வின் சில்வா மற்றும் ஆனந்த குலரத்னவைப் பயன்படுத்தி, சஜித்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தினார்.

இந்தத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் 2000 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் அம்பாந்தோட்டையில் சஜித் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றிகளைப் பெற்றுத் தந்தார். இது ராஜபக்சக்களை மேலும் கோபப்படுத்தியது.

ரணில் பிரதமரான போது சஜித் ஒரு சக்தி வாய்ந்த அமைச்சைப் பெறுவார் என்ற எதிர்பார்ப்புகள் இருந்தன. ஆனால் ரணில் அவரை சுகாதார பிரதி அமைச்சராக ஒதுக்கித் தள்ளினார். இருப்பினும், கட்சிக்குள் தனக்கு நேரம் வரும் என்று நம்பி சஜித் பொறுமையாக இருந்தார்.

2010தேர்தல் தோல்வியைத் தொடர்ந்து சஜித்தை தலைவராக்க ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அழுத்தம் அதிகரித்தது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உதவியுடன் ஐ.தே.க.வின் மத்திய குழு உறுப்பினர்களை தனது பக்கம் சாய்த்து, கிளர்ச்சியை அடக்கினார் ரணில்.

2015 ஜனாதிபதி தேர்தலில் கரு ஜெயசூரிய அல்லது சஜித் போட்டியிட வேண்டும் என அழைப்புகள் அதிகரித்த போது தான் போட்டியிடாவிட்டால் எந்த ஐ.தே.க. உறுப்பினரும் போட்டியிட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று ரணில் அறிவித்தார்.

கரு ஜெயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச ஆகிய இருவரையும் தடுக்க ரணில், மைத்திரிபால சிறிசேனவுடன் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தினார்.

மைத்திரிபால பொதுவேட்பாளராக உருவெடுத்தபோது, சந்திரிகா, மங்கள மற்றும் ஏனைய சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர்கள், தன்னை பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட வேண்டும் என்ற ரணிலின் கோரிக்கையை ஓரங்கட்டினர்.

பிரதமர் வேட்பாளர் எவருக்கும் உடன்பாடு இல்லை என்று மங்கள சமரவீர வெளிப்படையாகக் கூறிய நிலையில், ரணில் சஜித்தின் பக்கம் திரும்பினார். பிரசார மேடைகளில், ரணிலை பிரதமராக அறிவிக்காமல், ஐ.தே.க. மைத்திரிபாலவை ஆதரிக்காது என்று சஜித் அறிவித்தார்.

இது ரணிலை பிரதமராக ஒப்புக்கொள்ள சந்திரிகா, மங்கள மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை, கட்டாயப்படுத்தியது, இதனால், ரணில் காத்திருக்கும் பிரதமராக அதிகாரபூர்வமாக பரிந்துரைக்கப்பட்டார். மைத்திரிபாலவின் 2015 வெற்றிக்குப் பிறகு, ரணில் பிரதமரானார். ஆனால் விரைவில் அவருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே மோதல்கள் வெடித்தன.

சஜித்தை ஐ.தே.க. தலைவராக்க வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில், அறுபதுக்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில், மைத்திரிபால அவரைப் பிரதமர் பதவியை ஏற்க அழைத்தார். ஆயினும், வாய்ப்புகள் வந்தபோதும், தனது தலைவரை காட்டிக் கொடுக்க விருப்பமில்லாமல் சஜித் மறுத்துவிட்டார்.

2018ஆம் ஆண்டில், ரணிலை பிரதமர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும், ரணிலுக்கு எதிரான ஐ.தே.க குழுவின் ஆசீர்வாதத்துடன் சஜித் பிரதமர் பதவியை ஏற்க வேண்டும் என்றும், மைத்திரிபால சிறிசேன கூறினார். அந்த நேரத்தில் சஜித் தனது தலைவரின் முதுகில் குத்த மறுத்துவிட்டார்.

ரணிலின் நெருங்கிய உதவியாளர் மங்கள கூட 2019 ஜனாதிபதி தேர்தலுக்கு சஜித்தை பரிந்துரைக்க வேண்டும் என்று கூறிய போது, சஜித்தின் அமைச்சின் கீழ் உள்ள மத்திய கலாசார நிதியத்தில் நடந்த நிதி முறைகேடுகளை விசாரிக்க ரணில் ஒரு குழுவை நியமித்தார். 2019 ஜனாதிபதி தேர்தலில் சஜித்தை தோற்கடிக்க ரணில், மகிந்தவுடன் இணைந்து பணியாற்றினார் என்பதையும், கோட்டாபயவின் குடியுரிமையை நிரூபிக்க தடையாக இருந்த, குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலகத்தின் கோப்புகளை அவர் மறைத்தார் என்பதையும் அறியாதவர்கள் யாரும் இல்லை. சஜித் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்து ரணில் பிரதமர் பதவியை இழந்த போது சஜித்துக்கு எதிரான மத்திய கலாசார நிதியத்தின் குற்றச்சாட்டுகள் அடங்கிய கோப்புகள் அலரி மாளிகையில் ஒரு அலமாரியில் விடப்பட்டதாக ரணிலின் மாமாவின் சண்டே ரைம்ஸ், செய்தி வெளியிட்டது.

சஜித்தின் முறைகேடுகள் குறித்த இந்தக் கோப்பை மகிந்த லஞ்ச ஒழிப்பு ஆணையத்திடம் ஒப்படைத்தார். அதை ஒப்படைத்த பின்னர், 2020 பொதுத்தேர்தலில் தோல்வியடைந்து வீட்டில் இருந்த ரணிலை தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றம் வருமாறு அழைத்தார்.

ரணிலை எதிர்க்கட்சித் தலைவராக்கி சஜித்தை முடிப்பதே மகிந்த மற்றும் ராஜபக்ச குடும்பத்தினரின் உத்தியாக இருந்தது. 'அரகலய'வின் மத்தியில், கோட்டா பிரதமர் பதவியை சஜித்திடம் ஒப்படைக்கவிருந்த போது, மகிந்தவும் ராஜபக்ச குடும்பத்தினரும் அதை எதிர்த்தனர்.

ரணிலுக்கு பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்வதற்கு சஜித் நிபந்தனைகளை முன்வைத்தார், ரணில் எந்த நிபந்தனைகளையும் முன்வைக்காமல் பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டு ராஜபக்சக்களுடன் உடன்பாடு செய்து கொண்டார்.

ரணில் ஜனாதிபதியான பிறகு, எதிர்க் கட்சியில் இருந்த அனுரகுமாரவை சஜித்தை தாக்க தூண்டினார். சஜித் மற்றும் அனுர விவாதம் நாடு முழுவதும் பேசுபொருளாக இருந்தது. அந்த நேரத்தில், அனைத்து ஊடக நிறுவனங்களும் இந்த விவாதத்தை ஒளிபரப்ப விருப்பம் தெரிவித்தன. ஆனால் இருவரும் விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

தனது கட்டுப்பாட்டில் இருந்த சுயாதீன தொலைக்காட்சிக்கு சஜித் வர மாட்டார் என்பதை அறிந்த ரணில், அனுரவை அழைத்து வந்து விவாதத்தை ஒளி பரப்பி, சஜித்தை முடிக்குமாறு அறிவுறுத்தினார். மத்திய கலாசார நிதியத்தின் சஜித் மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்கப் போவதாக ஒரு செய்தியையும் அவர் விதைத்தார். ஐக்கிய மக்கள் சக்தி, சஜித்தை கைவிட்டு ரணிலுடன் சேரும் என்ற செய்தி நாட்டின் அனைத்து ஊடகங்களிலும் ஒரு மந்திரமாக உச்சரிக்கப்பட்டது, இது அனுரவுக்கு சாதகமாக அமைந்தது.

2025 ஜனாதிபதி தேர்தலில், ரணில் பெரும்பாலும் சஜித்துக்கு சாதகமான சிறுபான்மையினர் வசிக்கும் வடக்கு மற்றும் கிழக்கு மற்றும் மலையக தோட்டப் பகுதிகளுக்குச் சென்றார். சஜித், அனுரவை தோற்கடிக்க முடியாது என்றும் அவர் பகிரங்கமாகக் கூறினார்.

அஞ்சல் வாக்கெடுப்புக்கு முன், அனுர சுயாதீன தொலைக்காட்சிக்கு ஒரு நேர்காணலை வழங்கினார். தலதா அதுகோரள சஜித்தை கைவிட்டு ரணிலை ஆதரிக்க வந்தார், அனுர வெற்றி பெறுவார் என்று பகிரங்க அறிக்கை வெளியிட்டார். தலதாவின் கட்சி விலகலை அனுரவும் ஜே.வி.பி.யும் அதிகபட்சமாகப் பயன்படுத்திக் கொண்டு, தலதாவுக்குப் பதிலாக கீதா தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூறினர். சஜித்தின் சிறுபான்மை வாக்குகளை ரணில் உடைக்கவில்லை என்றால், இன்று சஜித் ஜனாதிபதியாக இருந்திருப்பார். சஜித் தோற்கடிக்கப்பட்ட பிறகு, சஜித்தை முடித்து எதிர்க் கட்சித் தலைவராக அனுர நியமிப்பார் என்று ரணில் நினைத்தார்.

இருப்பினும் 1988–89 பயங்கரவாதத்தில், ஜே.ஆர். மற்றும் பிரேமதாச அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இறந்து விட்ட அல்லது நோய்வாய்ப்பட்டிருந்த சூழலில், அரசியலில் பயங்கரவாதத்தின் ஒரே அடையாளமாக ரணிலைக் கண்டது ஜே.வி.பி.


பயங்கரவாதத்தின் போது பட்டலந்த சித்திரவதைக் கூடத்தை நடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்டது. எனவே கொலை செய்யப்பட்ட ஜே.வி.பி. இளைஞர்களுக்காக ரணிலைத் தண்டிக்க வேண்டும் என்று ஜே.வி.பி. கூறியது. அதன் பின்னர், அனுரவின் அரசாங்கம் ரணிலைத் துரத்தத் தொடங்கியது. இதன் விளைவு தான் ரணிலின் சிறைத் தண்டனை. ரணில் ஐ.தே.க.வின் தலைவராக இருந்தபோது, எஸ்.பி. திசாநாயக்க ரணிலைப் பாதுகாக்க வந்து நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சிறைக்குச் சென்றார்.

எஸ்.பி.திசாநாயக்கவைக் காப்பாற்ற அவரது கிராமமான ஹங்குரன்கெத்தவிலிருந்து கொழும்புக்கு ஒரு பேரணியை கட்சி ஏற்பாடு செய்தது. நாட்டின் மிகப்பெரிய பிரச்சினை வாழ்க்கைச் செலவு தான், எஸ்.பி. திசாநாயக்க அல்ல என்று கூறி, ரணில் அந்தப் பேரணியை பாதியிலேயே நிறுத்தினார்.


சரத் பொன்சேகா ரணிலைப் பாதுகாக்க வந்து சிறைக்குச் சென்ற போது பொன்சேகாவின் சார்பாக நடத்தப்பட்ட எந்தப் போராட்டத்திலும் ரணில் பங்கேற்கவில்லை.பொன்சேகா உதவியற்றவராக இருந்தார்.

ரணில் என்னைத் தோற்கடித்தார். (22ம் பக்கம் பார்க்க)


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இருப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.





ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்குதாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகலாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.





கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னின்று தீர்த்து வைத்து தொழிலை செவ்வனே நடத்தி விடுவீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்புண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.





சிம்மராசி அன்பர்களே! மாற்றங்கள் வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலுவையில் இருந்த சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! செயல் திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளிநாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப்போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது.





துலாம்ராசி அன்பர்களே! வாழ்வின் முன்னேத்திற்கான வழிகள் பிறக்கும். தொழில் - வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ்தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக்கிடையே சுமூகமான உறவு இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! மற்றவர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோகமாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.








தனுசுராசி அன்பர்களே! மனதிற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்துவது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.




மகரராசி அன்பர்களே! உங்களின் வெற்றிக்கு வழிகாட்டுதல்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.




கும்பராசி அன்பர்களே! உடனிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலில் இருந்த இடையூறுகளை களைவீர்கள். தொழிலாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற்படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி




மீனராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

## அநுர பின்வாங்க முடியாத இடத்...

(15ம் பக்கத் தொடர்ச்சி) சில நாட்கள் தடுத்து வைத்ததன் மூலம் அனுர அரசு உள்நாட்டு நீதி தொடர்பில் ஒரு புதிய தோற்றப்பாட்டைக் கட்டியெழுப்ப முற்படுகின்றது.

ஏற்கனவே ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் தனது இலங்கை விஜயத்தின் போது உள்நாட்டு நிதியை வெளிநாட்டு உதவிகளோடு பலப்படுத்துவது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். அதன்பின் அவர் வெளியிட்ட திருத்தப்படாத அறிக்கையிலும் அதே கருத்தை பிரதிபலித்திருந்தார். ஐநா புதிய அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்கலாம் என்று தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு பின்னணியில் உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு ரணில் கைது அரசாங்கத்துக்கு உதவும். இது தமிழ் தரப்பின் நிலைமையை ஐநாவில் மேலும் பலவீனப்படுத்தும். ஐநாவின் பொறுப்புக்கூறல் செய்முறையின் பங்காளியாக இருந்த ஒருவரே கைது செய்யப்படும் அளவுக்கு இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதி பலமாக உள்ளது என்று அரசாங்கம் ஜெனிவாவில் கூறப்போகிறது.

இந்த விடயத்தில் அண்மையில் இன அழிப்புக்கு அனைத்துலக விசாரணையைக் கேட்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று திரண்டிருப்பது சமயோசிதமானது பொருத்தமானது. எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ரணிலைக் கைது செய்தமை என்பது சிங்கள மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் நம்பகத் தன்மையை பலப்படுத்துகிறது.

அதே சமயம் எதிர்க் கட்சிகளை ஒன்று திரட்டியுள்ளது. உலக அளவிலும் உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு அது உதவக் கூடும். இந்த விடயத்தில் அரசாங்கத்துக்கு எதிராக ஒன்று திரளும் சிங்கள பௌத்த உயர் குழாமும் எதிர்க் கட்சிகளும் எப்படிப்பட்ட சவால்களை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப் போகின்றன என்பது தான் நாட்டின் எதிர்காலத்தையும் தேசிய மக்கள் சக்தியின் எதிர்காலத்தையும் ஐநாவில் தமிழர் விவகாரம் நீர்த்துப் போவதற்கான வாய்ப்புக்களையும் தீர்மானிக்கும்.

## இந்தியப் பிரதமர் மோடியின் சீனப் பயணம்..

(18ம் பக்கத் தொடர்ச்சி) வாய்ப்பு உள்ளது என்கிறார் பிரியங்கா கிஷோர். ஆப்பிள் நிறுவனம் வியட்நாமில் ஏர்பாட்ஸ் மற்றும் கைக்கடிகாரங்களை தயாரிக்கிறது, இந்தியாவில் ஐஃபோன் தயாரிக்கிறது. எனவே இதில் குழப்பம் இருக்காது என்று அவர் சுட்டிக் காட்டுகிறார்.

விசாவிற்கு துரிதமாக அனுமதி கிடைப்பது சீனாவுக்கும் எளிதான வெற்றி. அது இந்தியாவில் நேரடியாகவோ அல்லது முதலீடுகள் மூலமோ இந்திய சந்தைகளில் நுழைய விரும்புகிறது. அமெரிக்க சந்தை வாய்ப்பு குறையும் பிரச்னையை சீனா சமாளிக்கிறது. ஆசியான் சந்தைகளை அது ஏற்கனவே நிரப்பி விட்டது. ஷீன், டிக்டாக் போன்ற பல சீன செயலிகள் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளன,' என்கிறார் கிஷோர். 145 கோடி மக்களின் சந்தையில் பொருட்களை விற்கும் வாய்ப்பை சீனா வரவேற்கும்.' என்கிறார்.

இரு நாட்டு உறவின் சிக்கலைக் கருத்தில் கொண்டால், ஒரே சந்திப்பு பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பில்லை. சீனா - இந்தியா உறவை மேம்படுத்த நீண்ட காலமெடுக்கும். ஆனால் மோதியின் சீனா பயணம் சில விரோதத்தைக் குறைப்பதுடன், இந்தியாவுக்கு வேறு வழிகள் இருக்கின்றன என்ற தெளிவான செய்தியை அமெரிக்காவுக்கு வழங்கும்.

நன்றி:- பிபிசி

## அநுர எதைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார்?

(17ம் பக்கத் தொடர்ச்சி) லால் கந்த அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அந்த வெற்றிடத்தில் தான் ஜனாதிபதியாகும் வாய்ப்பு ரணிலுக்குக் கிடைத்தது. அந்த வெற்றிடம் இப்பொழுதும் உண்டு. ரணிலை முன்வைத்து எதிர்க்கட்சிகள் மற்றும் சிங்கள மேட்டுக்குடி என்பன ஒரு பலமான திரட்சியை உருவாக்கினால் அது எதிர்காலத்தில் தேசிய மக்கள் சக்திக்கு சவாலாக மாறலாம். ஆனால் அந்த திரட்சிக்கு தலைமை தாங்க ரணிலால் முடியுமா? அனுர கட்டவிழ்த்து விட்டிருப்பது எதனை?

## ஜனாதிபதித் தேர்தலில் அநுரவை...

(21ம் பக்கத் தொடர்ச்சி) ரணில் அனுரவைத் தோற்கடித்தார். ரணிலுக்காக நாம் ஏன் எங்கள் கழுத்தைக் கொடுக்க வேண்டும்? என்று, ரணில் சிறைக்குச் சென்ற போது சஜித் சொல்லியிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் சொல்லவில்லை.

சஜித்தும் ஐக்கிய மக்கள் சக்தியும் ரணிலுக்காகப் போராடமாட்டார்கள் என்று அரசாங்கம் நினைத்தது. சஜித் இந்த விளையாட்டில் இணைந்த பிறகுதான், அரசாங்கம் அமைதியற்ற நிலைக்குள் தள்ளப்பட்டது.

தனது நண்பர் என்று அழைத்த அனுரவின் அரசாங்கம், அவரை சிறையில் அடைத்து, நிர்க்கதியான நிலைக்குள் தள்ளிய போது, ரணில் எப்போதும் தனது எதிரி என்று நினைத்த - எப்போதும் எதிரி என்று சொன்ன சஜித், ரணிலைப் பார்க்க வந்த போது ரணில் என்ன நினைத்திருப்பார்?

ரணிலுக்கு முன் சிறிலங்காவில் சிறைக்குச் சென்ற அரச தலைவர் சிறி விக்கிரமராஜசிங்கன் என்ற ஒரு கருத்து அண்மைய நாட்களில் முகநூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.



மன்னன் சிறி விக்கிரம ராஜசிங்கன் வெள்ளையர்களால் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அது சிங்கள உயரடுக்கின் உதவியுடன் நடந்தது. மன்னருக்கு அவர்களுடன் மோதல்கள் இருந்ததால், அவர்கள் மன்னரை வெள்ளையர்களிடம் காட்டிக் கொடுத்தனர்.

ரணிலுக்கு சஜித்துடன் மட்டுமல்ல, எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும் மோதல் இருந்தது. ஆனால் சஜித், ரணிலுக்கு துரோகம் செய்யவில்லை.

ஆங்கில மூலம்-

உபுல் ஜோசப் பெர்னாண்டோ

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com








# அநுரவின் வடக்கு விஜயம் குறித்து போலித்தனமான வதந்திகளைப் பரப்பும் வடக்கு தமிழ் அரசியல்வாதிகளை சாடிய அமைச்சர்

செம்மணி புதைகுழி விவகாரத்தை திசை திருப்பி அதனை மூடிமறைப்பதற்காகவே ஜனாதிபதி வடக்குக்கு வந்துள்ளார் என வெளியாகும் தகவல்களை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அடியோடு நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் பரந்தன்–கரச்சி–முல்லைத்தீவு வீதியில் நந்திக்கடல் வாவிக்கு அருகில் அமைந்துள்ள வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளை தொடங்கி வைக்கும் நிகழ்வில் 02 செப் 2025 கலந்துக் கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர்



இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு,

வடக்கிலுள்ள புதைகுழிகளை மூடி மறைப்பதற்காகவே யாழ்ப்பாணத்துக்கு வந்து அபிவிருத்தி நடவடிக்கைகளை ஜனாதிபதி ஆரம்பித்து வைக்கின்றார் என சில தமிழ் அரசியல்வாதிகள் பாவித்தனமான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

செம்மணி புதைகுழியை தோண்டுவதற்கு நிதி ஒதுக்கியது யார்? ஸ்கேன் இயந்திரம் கொண்டு வந்தது யார்? புதைகுழியை பாதுகாப்பதற்கு இரவு நேரங்களில் காவலாளிகளை போட்டிருப்பது யார்? இவற்றையெல்லாம் எமது அரசாங்கமே செய்கின்றது.

இது தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, மக்களுக்கு நீதி நிலை நாட்டப்படும். இது தொடர்பான உறுதிமொழியைக் கூட எமது ஜனாதிபதியே வழங்கியுள்ளார்.

இனி மேலும் தமிழ் மக்களுக்கு இப்படியான அரசியல்வாதிகளால் தண்ணி காட்ட முடியாது. தமிழ் மக்கள் அவர்களை நிராகரித்து விட்டனர். இதனால் தான் கடந்த உள்ளுராட்சிசபைத் தேர்தலில் குப்பைகள் எல்லாம் கூட்டு சேர்ந்தன. துரோகிகள் என விமர்சிக்கப்பட்டவர்களுடன் கூட கூட்டு சேர்ந்தனர். ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து எதிர்வரும் 23 ஆம் திகதி ஒரு வருடமாகின்றது. பொருளாதார சவால்கள் உள்ளன. அவற்றை வெற்றிகரமாக எதிர்கொண்டால்தான் அபிவிருத்திகளை முன்னெடுக்ககூடியதாக இருக்கும். பொருளாதாரத்தை ஸ்தீரப்படுத்தி வருகின்றோம்.

எமக்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்துகள் விதைக்கப்படலாம். ஆனால் உண்மை என்னவென்பதை மக்கள் அறிந்து கொள்வார்கள். எங்களுக்கான ஆதரவை மென்மேலும் வெளிப்படுத்துவார்கள் என்றார்.

## செம்மணி புதைகுழி வழக்கை கையாண்ட நீதிபதி ஆனந்தராஜாவுக்கு பதவி உயர்வு!



அரியாலை செம்மணிப் புதைகுழி வழக்கை, மிகச் சிறப்பான முறையில் கையாண்டு வந்த யாழ்ப்பாணம் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்த ராஜாவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதிகளாக சில நீதிபதிகள் பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவராகவே, நீதிபதி ஆனந்தராஜாவுக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

பதவி உயர்வுக்கான அனுபவத்தையும், தகுதியையும் நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா நீண்ட காலத்துக்கு முன்னரே பெற்றிருந்த போதிலும் தற்போது இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால், நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்குகளை இனிவரும் நாள்களில் கையாள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கில், கிட்டத்தட்ட 50 வீதத்துக்கும் மேற்பட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன. பணிகள் இவ்வாறு வேகமாக நிறைவடைவதற்கு நீதிபதி ஆனந்தராஜா காட்டிய அக்கறையும், அவருடைய அர்ப்பணிப்பான செயற்பாடுகளுமே காரணம் என்று துறை சார் செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். இவ்வாறான நிலையிலேயே, அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்பட்டு, செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கை அவர் கையாள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அகழ்வுப் பணிகளை சம்பிரதாய பூர்வமாக மேற்பார்வை செய்யாமல், சான்றுப் பொருள்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளையும் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னெடுத்திருந்தார். அகழ்வுப் பணிகளின் கால அளவை நீடிப்பது தொடர்பில் காத்திரமான உத்தரவுகளை வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.